சுற்றுநிருப இலக்கம் 01/2026

# அகில இலங்கைத் தமிழ்மொழித் தினப் போட்டிகள்

# 2026 – 2030

## சுற்றுநிருபம்

தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
'இசுருபாய'
பத்தரமுல்ல



Scanned with CamScanner

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/01/05/03/05/13 11

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2026.01 30

சுற்றுநிருப இல – 01/ 2026

சகல மாகாண பிரதம செயலாளர்கள்

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்

சகல பாடசாலை அதிபர்கள்.

## அகில இலங்கைத் தமிழ்மொழித்தினப் போட்டிகள் - 2026 – 2030

2026 ஆம் ஆண்டு தொடக்கம் 2030 ஆம் ஆண்டு வரை அகில இலங்கைத் தமிழ்மொழித் தினப் போட்டிகளை நடாத்துவதற்காக 01/2026 இலக்கமிடப்பட்ட சுற்றுநிருபம் வெளிவருகிறது. 02.02..2026 தொடக்கம் அமுலிருக்கும் இச்சுற்றுநிருபத்தின் படி பாடசாலை மட்டம் தொடக்கம் தேசிய மட்டம் வரை அனைத்து மட்டங்களுக்கும் பொருந்தும் வகையில் தமிழ்மொழித்தினப் போட்டிகளை நடாத்துதல் வேண்டும்.

2026ஆம் ஆண்டு முதல் அமுலுக்கு வரும் இச்சுற்றுநிருபம் எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு நடைமுறையிலிருக்கும். இதில் பங்குகொள்ளும் சகல போட்டியாளர்கள் மற்றும் ஏனைய பங்குபற்றுநர்கள் போட்டியின் சகல சந்தர்ப்பங்களிலும் இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகள் மற்றும் விதிகளைப் பின்பற்றுவதற்கு கட்டுப்பட்டுள்ளீர்கள்.

அது தொடர்பாக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தி இப்போட்டிகளில் அவர்களது ஆக்கங்களை முன்வைப்பதற்குத் தேவையான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நாலக கළුවෙව
செயலாளர்

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk
moesecretaryoffice@gmail.com

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்லை, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/01/05/03/05/13 II

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2026.01 . 30

චක්‍රලේඛ අංක - 01/2026

සියලු ම පළාත් ප්‍රධාන ලේකම්වරුන්
සියලු ම පළාත් අධ්‍යාපන ලේකම්වරු
සියලු ම පළාත් අධ්‍යාපන අධ්‍යක්ෂවරුන්
සියලු ම කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂවරුන්
සියලු ම කොට්ඨාස අධ්‍යාපන අධ්‍යක්ෂවරුන්
සියලු ම විදුහල්පතිවරුන්

<u>සමස්ත ලංකා දෙමළ භාෂා දින තරගාවලිය 2026-2030</u>

2026 වර්ෂය ආරම්භයේ සිට 2030 වර්ෂය දක්වා පවත්වන සියලු සමස්ත ලංකා දෙමළ භාෂා දින තරගාවලි සඳහා චක්‍රලේඛ අංක 01/2026 නිකුත් කර ඇත. 2026.02.02 දින සිට ක්‍රියාත්මක වන මෙම චක්‍රලේඛය අනුව පාසල් මට්ටමේ සිට ජාතික මට්ටම දක්වා සියලු ම මට්ටම් වලට සුදුසු පරිදි දෙමළ භාෂා දින තරගාවලි ප්‍රශස්ත අයුරින් සංවිධානය කළ යුතුය.

2026 වර්ෂයේ සිට ක්‍රියාත්මක වන මෙම චක්‍රලේඛය ඉදිරි වසර 5 ක් සඳහා ක්‍රියාත්මක වීමට නියමිත ය. මේ සඳහා සහභාගිවන සියලු තරගකරුවන් හා සම්බන්ධ පාර්ශවයන් සෑම අවස්ථාවකදී ම මෙම චක්‍රලේඛයේ සඳහන් සියලු ම නියමයන් හා මාර්ගෝපදේශ අනුගමනය කිරීමට බැඳේ.

ඒ අනුව මෙම තරගවලට තම නිර්මාණ ඉදිරිපත් කිරීම සඳහා වූ ගුරුවරුන්ට හා සිසුන්ට මඟ පෙන්වීමට අවශ්‍ය ක්‍රියාමාර්ග ගන්නා ලෙස කාරුණිකව දන්වමි.

නාලක කළුවැව
ලේකම්

## தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே!

**-மஹாகவி சுப்பிரமணிய பாரதியார்**

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் தேயுதித்தே ஒன்றுபல வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே!

**மனோன்மணீயம் தெ.பொ.மீனாட்சி சுந்தரம்பிள்ளைள**

சுற்று நிருபம் - 01/2026

எனது இல: ED/01/05/03/05/13 II
தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை,
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல.
2026.01.30

சகல மாகாண பிரதம செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல பாடசாலை அதிபர்கள்

# அகில இலங்கைத் தமிழ்மொழித் தினப் போட்டிகள்

## 2026 – 2030

**1.0 நோக்கு-:**

தமிழ்மொழியின் பல்தர ஆற்றலைப் பிரயோகத்தினூடே கற்று, செழுமையாக வெளிப்படுத்துதல்.

**1.1 பணிக்கூற்று**

1.1.1 தமிழ்மொழியைப் பிரயோக அடிப்படையில் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுதல்.
1.1.2 தமிழ்மொழியினது செழுமையின் ஆழத்தை அறிந்துகொள்ளல்.
1.1.3 தமிழ்மொழியினூடாகத் தமிழ்க் கலைவடிவங்களை அறிந்து செயற்படுத்தல்.
1.1.4 தமிழ்மொழி ஊடாகத் தமது ஆளுமையை வளர்த்துச் செல்லுதல்.
1.1.5 தமிழ்மொழி கற்பதால் பயனுள்ள வகையில் பொழுதைக் கழிக்கலாம் என்பதை அறிதல்.
1.1.6 ஒருவரோடொருவர் இணைந்து வாழ்வதற்கு உதவுவதே மொழி என்பதை அனுபவத்தில் அறிந்து ஒழுகுதல்

**2.0 சுற்றுநிருபத்தின் கால எல்லை :**

இச்சுற்றுநிருபம் **2026 தொடக்கம் 2030** வரையிலும் செல்லுபடியாகும் வண்ணம் நடைமுறையில் இருக்கும்.

**3.0 போட்டி ஏற்பாட்டிற்கான ஆவணங்கள் :**

இச்சுற்றுநிருபத்திற்கு மேலதிகமாக 2026 தொடக்கம் சுற்றுநிருப இணைப்பு ஒன்று கல்வி உயர்கல்வி மற்றும் தொழிற்கல்விஅமைச்சின் செயலாளரினால் வருடாந்தம் வெளியிடப்படும். சுற்றுநிருபத்தில் இணைப்பினைப் பார்க்கவும் என்ற இடத்தில், குறித்த வருடத்திற்கான இணைப்பிற் குறிப்பிடப்படும் விதிமுறைகளையும் சேர்த்தே அவ் வருடத்திற்கான போட்டிகளை ஏற்பாடு செய்து, நடாத்துதல் வேண்டும்.

**4.0 போட்டி நடைபெறும் மட்டங்கள் :**

1. பாடசாலை மட்டப் போட்டிகள்
2. வலய மட்டப் போட்டிகள்
3. மாகாண மட்டப் போட்டிகள்
4. தேசிய மட்டப் போட்டிகள்

## 5.0 பாடசாலை மட்டப் போட்டிகள் :

5.1 சகல தமிழ்மொழி மூலப் பாடசாலைகளிலும் தமிழ்மொழித் தினப் போட்டிகள் கட்டாயம் நடைபெறுதல் வேண்டும். பெப்ரவரி 21 ஆந் திகதி சர்வதேச தாய்மொழித்தினம் நடாத்தப்படுவதோடு, அத்தினத்தில் சகல பாடசாலைகளிலும் தமிழ்மொழித்தினப் போட்டிகள் நடாத்தப்படவேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். இதற்கான ஏற்பாடுகளை மேற்படி பாடசாலை அதிபர்களே மேற்கொள்ளல் வேண்டும்.

5.2 குறிப்பிட்ட பிரிவிற்குரிய அனைத்து மாணவர்களும் போட்டிகளில் ஈடுபடச் சந்தர்ப்பமும் ஊக்கமும் வழங்கப்பட வேண்டும். போட்டிகள் நடைபெறுவதற்கு முன்பு போதிய கால அவகாசத்துடன் அனைத்து மாணவர்களுக்கும் அறிவிக்கப்படல் வேண்டும். இவ் அறிவித்தல் பாடசாலை அறிவித்தற் பலகையில் காட்சிப்படுத்தப்படுவதோடு, இதன் பிரதி குறிப்பிட்ட கோவையில் பேணப்படுதல் வேண்டும்.

5.3 ஒவ்வொரு வருடமும் வெளியிடப்படும் **சுற்றுநிருப இணைப்பில் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னதாகக்** கோட்ட/வலயப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோட்ட/வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். **போட்டியாளர் கலந்துகொள்ளும் போட்டிப் பிரிவுக்குரிய தரத்தில்தான் கல்வி கற்கின்றார் என்பதை அதிபர் உறுதிப்படுத்த வேண்டும்.**

5.4 பாடசாலை, கோட்ட, வலய, மாகாண மற்றும் தேசிய மட்டப் போட்டிகளில் தமது பாடசாலை மாணவர்கள் பங்குபற்றிய விபரங்கள் மற்றும் பெறுபேறுகள் யாவும் பாடசாலைகளில் கட்டாயம் அறிக்கைப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வறிக்கைகள் பாடசாலை மதிப்பீட்டின் போது இணைபாடவிதான செயற்பாடுகளின் கீழ் மதிப்பிடப்படும்.

5.5 தமிழ்மொழித்தினப் போட்டியானது கலைத்திட்டத்தின் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் ஒன்றாகும். பாடசாலை மட்டத்தில் மேற்படி போட்டி நிகழ்ச்சிகள் நடாத்தப்படாதவிடத்து இணைபாடவிதானச் செயற்பாடு பாதிக்கப்படுமாதலின், இப்போட்டிகளை நடத்தாத சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரை அதற்கான சரியான விளக்கம் அளிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் பணித்தல் வேண்டும்.

5.6 பாடசாலையில் தமிழ்மொழித் தினப்போட்டிகளின் பரிசளிப்பு விழாவை நடாத்துவதற்கு அதிபர் பொறுப்பாக இருத்தல் வேண்டும். பரிசளிப்பு விழாவிற்கு இலக்கியவாதிகள், துறைசார்ந்த அறிஞர்கள் அழைக்கப்படல் வேண்டும்.

**5.7 எழுத்தாக்கப் போட்டிகளில் குறிப்பிட்ட பிரிவிற்குரிய சகல மாணவர்களும் பங்குபற்றச் சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும். அவ்விதமே பாவோதலுக்குரிய பாடல்களைக் குறிப்பிட்ட பிரிவிற்குரிய சகல மாணவர்களும் மனனம் செய்வதற்குக் கொடுக்கப்படல் வேண்டும்.**

5.8 பாடசாலைகளில் இல்ல ரீதியாகத் தமிழ்மொழித் தினப் போட்டிகள் நடாத்தப்படுவதன் மூலம் மாணவர்கள் ஆர்வத்துடன் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பம் அதிகரிப்பதால் பாடசாலை அதிபர்கள் இவ்விடயத்தில் கூடிய கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

## 6.0 வலய மட்டப் போட்டிகள் :

6.1 வலய மட்டப் போட்டிகள் நடாத்தப்படுவது கட்டாயமானதாகும். வலய மட்டப் போட்டிகளை நடாத்துவதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயத் தமிழ்மொழிப்பாட இணைப்பாளர் ஆகியோர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

6.2 வலய மட்டப் போட்டிகளைத் திட்டமிடும் போது பின்வரும் விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

6.2.1 வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் வலயத்தில் உள்ள கோட்டங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கோட்டமட்டப் போட்டிகள் நடாத்தப்படலாம். இது தொடர்பாக தீர்மானிக்கும் அதிகாரம் வலயக் கல்விப் பணிப்பாளருக்குரியதாகும்.

6.2.2 கோட்டமட்டப் போட்டிகளை நடாத்துவதற்குத் தீர்மானிக்கும் பட்சத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் போட்டி இணைப்பாளராகச் செயற்படவேண்டும்.

6.2.3 கோட்டமட்டப் போட்டிகளுக்கான நடுவர் பட்டியல் வலயக்கல்விப் பணிப்பாளரால் அனுமதிக்கப்படல் வேண்டும்.

6.2.4 கோட்டமட்டத்திலிருந்து வலயமட்டத்திற்கு போட்டியாளர்/குழுக்களைத் தெரிவுசெய்தல் பின்வருமாறு அமைதல் வேண்டும்.

**அட்டவணை 1**

| கோட்டங்களின் எண்ணிக்கை | வலய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட வேண்டிய போட்டியாளர்/குழுக்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1 | வலய மட்டம் மாத்திரம் |
| 2 | கோட்ட மட்டத்தில் 1, 2, 3 ஆம் இடங்கள் |
| 3 அல்லது 3 க்கு மேல் | கோட்ட மட்டத்தில் 1, 2 ஆம் இடங்கள் |

(இவ்விதி கோட்ட மட்டப் போட்டிகளுக்கு மாத்திரம் பொருந்தும்)

6.3 வலய மட்டப் போட்டிகளை, ஒவ்வொரு வருடமும் **சுற்றுநிருப இணைப்பில்** குறிப்பிடப்படும் திகதிகளுக்கு முன்னதாக நடாத்துவதற்கு மாகாண மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

6.4 வலய மட்டப் போட்டிகளை நடாத்த தீர்மானிக்கப்பட்ட திகதி பற்றி இரண்டு வாரங்களுக்கு முன்னதாக நடுவர்களின் பெயர் விபரப் பட்டியலுடன் எழுத்து மூலம் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு முன்னிலைப்படுத்தப்பட்டு, அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். **இவ்விதி கண்டிப்பாகப் பின்பற்றப்படல் வேண்டும்.**

6.5 வலய மட்டப் போட்டிகளில் வெற்றி பெறும் போட்டியாளர்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பத்துடன் சான்றிதழ்கள் வழங்கப்படவேண்டும்.

## 7.0 மாகாண மட்டப் போட்டிகள் :

7.1 சகல மாகாணங்களிலும் மாகாண மட்டப் போட்டிகள் நடாத்தப்படவேண்டும். மாகாண மட்டப் போட்டிகளை நடாத்துவதற்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாண தமிழ்மொழிப்பாட இணைப்பாளர் ஆகியோர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

7.2 மாகாண மட்டப் போட்டிகளை, ஒவ்வொரு வருடமும் **சுற்றுநிருப இணைப்பில்** குறிப்பிடப்படும் திகதிகளுக்கு முன்னதாக நடாத்துவதற்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

7.3 மாகாண மட்டப் போட்டிகளை நடாத்தத் தீர்மானிக்கப்பட்ட திகதி பற்றி இரண்டு வாரங்களுக்கு முன்னதாக தெரிவுசெய்யப்பட்ட நடுவர்களின் பெயர் விபரப் பட்டியலுடன் எழுத்து மூலம் கல்வி அமைச்சின் தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளையின் தமிழ்மொழி அலகிற்கு முன்னிலைப்படுத்தப்பட்டு, அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். **இவ்விதி கண்டிப்பாகப் பின்பற்றப்படல் வேண்டும்.**

7.4 மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றி பெறும் போட்டியாளர்களுக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பத்துடன் சான்றிதழ்கள் வழங்கப்படவேண்டும்.

7.5 மாகாணத்தின் கலை, கலாசாரத்தினைப் பிரதிபலிக்கும் வண்ணம் புதிய போட்டிகளை ஏற்பாடு செய்து மாகாணமட்டம் வரை நடாத்திப் பரிசளிப்புச் செய்யலாம்.
(உ-ம். நாட்டுக்கூத்து, சிந்துநடைக்கூத்து, காமன்கூத்து போன்றவை.)

## 8.0 போட்டியின் முக்கியத்துவம் மற்றும் ஒழுக்கமும் வகைகூறலும் :

### 8.1 போட்டியின் முக்கியத்துவம்

8.1.1 வலய, மாகாண மட்டப் போட்டிகள் யாவும் சுற்றுநிருபத்திற்கு அமைவாகச் செவ்வனே நடைபெறுதலை உறுதிப்படுத்தும் பொறுப்பு, மாகாணக் கல்விப் பணிப்பாளர்களைச் சார்ந்ததாகும்.

8.1.2 தேசிய மட்டப் போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதியின் போது சலுகைகளைப் பெறச் சந்தர்ப்பம் இருப்பதால் போட்டிகள் யாவும் சுற்றுநிருபத்திற்கும் சுற்றுநிருப இணைப்புக்கும் அமைவாக நடாத்தப்படுவதனை **உரிய மட்டங்களுக்குப் பொறுப்பானவர்கள்** உறுதிப்படுத்துதல் வேண்டும்.

8.1.3 மாகாண மட்டம், வலய மட்டம், பாடசாலை மட்டங்களில் தமிழ்மொழித் தினப் போட்டிகளும் சான்றிதழ் வழங்கும் வைபவங்களும் சிறப்பாக நடாத்தப்படுவதை அந்தந்த மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

8.1.4 போட்டிகள் பரீட்சைக்கு ஒப்பானவை. பரீட்சை நடைமுறைகளை ஒத்ததாக இப்போட்டிகளின் நடைமுறைகளும் எவ்வித கவனக் கலைப்பான்களுமற்ற சூழ்நிலைகளில் நடைபெற ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

8.1.5 சகல மட்டப் போட்டிகளின் போதும் குறிப்பிட்ட போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்கள், நடுவர்கள், போட்டி இணைப்பாளர்கள் மாத்திரமே போட்டிகள் நடைபெறும் பகுதிகளுக்குள் அனுமதிக்கப்படுவர்.

8.1.6 போட்டி நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு போட்டியினையும் ஒலி, ஒளிப்பதிவு செய்தல், புகைப்படம் எடுத்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

8.1.7 போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்புகள் தொடர்பில் நடுவர்களுடன் கலந்துரையடல், விவாதித்தல் மற்றும் சமூக ஊடகங்களில் விமர்சனம் செய்தல் என்பன முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளன.

8.1.8 இயல், இசை, நாடகம் என முத்தமிழாக தமிழ்மொழி விளங்குவதால் ஆரம்ப காலம் தொடக்கம் இசை, நடன, நாடகப் போட்டிகள் தமிழ்மொழித் தினப்போட்டிகளில் நடாத்தப்பட்டு வருகின்றன. எனவே ஒவ்வொரு மட்டப் போட்டிகளின் போதும் அந்தந்த மட்டங்களின் அழகியல் பாடப் பொறுப்பாளர்கள் இப்போட்டிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

## 8.2 ஒழுக்கம் மற்றும் வகைகூறல்

8.2.1 ஒவ்வொரு மட்டப் போட்டிகளிலும் கலந்து கொள்வதற்காகப் போட்டி நடைபெறும் இடங்களுக்கும் விடுதிகளாகப் பயன்படுத்தப்படும் இடங்களுக்கும் வருகை தரும் மாணவர்களது ஒழுக்கம், நடத்தை, பாதுகாப்புத் தொடர்பில் அதிபர், குழுவிற்குப் பொறுப்பான ஆசிரியர்களும் விசேட கவனம் செலுத்தவேண்டும்.

8.2.2 போட்டியின் சகல சந்தர்ப்பங்களிலும் ஏதேனும் ஒரு பாடசாலை சார்ந்து பாடசாலை அதிபர், வலய மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் அல்லது அவரின் சார்பில் போட்டிப் பொறுப்பாளர் ஆகியோருக்கிடையே மாத்திரமே அனைத்துக் கலந்துரையாடல்களும் இடம்பெற வேண்டும். தமது பாடசாலைச் சமூகத்தின் ஏனைய தரப்பினரை இச்செயற்பாடுகளில் தலையிடச் செய்யாதிருப்பதற்கான பொறுப்பு உரிய **பாடசாலையின் அதிபரிடமே நேரடியாகக் கையளிக்கப்படுகின்றது.**

8.2.3 சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளை வாசித்து விளங்கிக் கொள்ளாமை அல்லது தெரிந்து கொள்ளாமை அதிலிருந்து விடுபடுவதற்கான காரணமல்ல என்பதுடன், அதன் விளைவாக மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் யாவும் கவனயீனத்தினதும் பொறுப்பின்றிச் செயற்பட்டமையினதும் விளைவாக ஏற்பட்டதாகக் கருதப்படும். அதற்குப் பொறுப்புக் கூறவேண்டிய தரப்பினருக்கு எதிராக உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

8.2.4 போட்டியில் பங்கேற்கும் மாணவர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், போட்டி நடுவர்கள் ஆகியோரினதும் பாடசாலைகள், கல்விப் பணிமனைகள் மற்றும் கல்வி அமைச்சினதும் ஆளுமை, அடையாளம் மற்றும் கௌரவத்திற்கும் பாதிப்பு ஏற்படா வண்ணம் சகலரும் செயற்படுதல் வேண்டும். அவ்வாறான பாதிப்புகளை விளைவிக்கும் வகையில், பாதகமான விடயங்களை எழுத்து மூலமாக, வாய்மொழி மூலமாக அல்லது ஊடகங்களைப் பயன்படுத்தி வெளியிடுபவர்களுக்கு எதிராகச் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

8.2.5 இப்போட்டிச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்புரைகள் மற்றும் விதிமுறைகளில் ஏதேனும் ஒன்றை அல்லது பலவற்றை மீறும் வகையில் செயற்பட்டிருப்பதாக வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் போட்டியின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பெறுபேறுகள் பட்டியலிலிருந்து குறித்த பாடசாலையினை நீக்குவதற்கும், சான்றிதழ்களை இரத்துச் செய்வதற்கும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும், உரிய ஏனைய தீர்மானங்களை எடுப்பதற்குமான அதிகாரம் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு உள்ளது.

## 9.0 நடுவர்கள் :

9.1 உரிய துறையில் போதிய **தகைமை, அனுபவம்** மற்றும் **நடுவுநிலைமை** உள்ளவர்களே நடுவர்களாக நியமிக்கப்படுதல் வேண்டும்.

9.2 எழுத்தாக்கப் போட்டி மற்றும் தனிப் போட்டி நிகழ்ச்சிகளுக்கு **மூன்று நடுவர்களும்** திறந்த அல்லது குழுப் போட்டி நிகழ்ச்சிகளுக்கு **ஐந்து நடுவர்களும்** நியமிக்கப்படல் வேண்டும்.

9.3 பாடசாலை மட்டப் போட்டிக்குரிய நடுவர் பட்டியல் கோட்டக் கல்விப் பணிப்பாளரால் அனுமதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9.4 கோட்டமட்டப் போட்டிகள் நடாத்தப்படும் சந்தர்ப்பங்களில் அதற்குரிய நடுவர் பட்டியல் வலயக் கல்விப் பணிப்பாளரால் அனுமதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9.5 வலய மட்டப் போட்டிக்குரிய நடுவர் பட்டியல் மாகாணக் கல்விப் பணிப்பாளரால் அனுமதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9.6 மாகாணமட்டப் போட்டிக்குரிய நடுவர் பட்டியல் கல்வி உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரினால் தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளையின் தமிழ்மொழி அலகிற்கு முன்னிலைப்படுத்தப்பட்டு, அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

9.7 தேசியமட்டப் போட்டிக்குரிய நடுவர் பட்டியல், கல்வி உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரினால் (கல்விப் பண்புத்தர அபிவிருத்தி) மேலதிக செயலாளரினால் அனுமதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**9.8 9.1 முதல் 9.7 வரை குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடுவர் நியமனம் மற்றும் அனுமதி பெறப்படாது நடாத்தப்படும் போட்டி முடிவுகள் மேனிலை மற்றும் இறுதிப் போட்டிகளுக்காக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

## 10.0 போட்டிகளைக் கண்காணித்தலும் இறுதி முடிவெடுத்தலும் :

10.1 பாடசாலை மட்டப் போட்டிகளின் ஒழுங்குகளில் பாடசாலை அதிபரின் முடிவே இறுதியானதாக இருத்தல் வேண்டும்.

10.2 கோட்டமட்டப் போட்டிகள் நடாத்தப்படும் பட்சத்தில் கோட்ட மட்டப் போட்டிகளின் ஒழுங்குகளில் வலயக்கல்விப் பணிப்பாளரின் முடிவே இறுதியானதாக இருத்தல் வேண்டும். வலயமட்டப் போட்டிகளின் ஒழுங்குகளில் வலயக்கல்விப் பணிப்பாளரின் முடிவே இறுதியானதாக இருத்தல் வேண்டும

10.3 மாகாணமட்டப் போட்டிகளின் ஒழுங்குகளில் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் முடிவே இறுதியானதாக இருத்தல் வேண்டும்.

10.4 தேசிய மட்டப் போட்டிகளின் ஒழுங்குகளில் கல்வி உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரினால் முடிவே இறுதியானதாக இருத்தல் வேண்டும்.

**10.5 சகல மட்டப் போட்டிகளையும் மேற்பார்வை செய்வதுடன், தேவையான ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கக்கூடிய அதிகாரத்தைக் கல்வி அமைச்சின் தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளையின் தமிழ்மொழி அலகே கொண்டிருக்கும்.**

## 11.0 மதிப்பீடு :

11.1 நடுவர்களாகக் கடமையாற்றுபவர்கள், போட்டி நடைபெறும் சந்தர்ப்பத்தில் தங்களுக்கிடையில் எவ்வித கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளமுடியாது.

11.2 **போட்டி நடைபெறும் சந்தர்ப்பத்தில் நடுவர்கள் கையடக்கத்தொலைபேசி பயன்படுத்துவதை முற்றாகத் தவிர்த்தல் வேண்டும்.**

11.3 நடுவர்கள் தரப்பட்ட புள்ளி விபரத்தாளில் உரிய புள்ளிகளை இட்டு, மொத்தப் புள்ளிகளையும் நிலைகளையும் குறிப்பிட்டு, தத்தமது பெயரை எழுதி ஒப்பமிட்ட பின்னர், தனித்தனியான இரகசிய உறையிலிட்டு இணைப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

11.4 புள்ளி விபரத்தாளில் ஒருமுறை இடப்பட்ட புள்ளிகளை மாற்றம் செய்ய முடியாது.

11.5 புள்ளிகளைப் பதியும் போது தெளிவற்ற இலக்கங்கள் காணப்படின் பதிந்த புள்ளியைப் பேனாவினால் **வெட்டி, புள்ளியைத் தெளிவாகப் பதிந்து, சிற்றொப்பமிடல்** வேண்டும்.

11.6 நடுவர்களினால் தனித்தனியாக ஒப்படைக்கப்பட்ட புள்ளிவிபரத்தாள் அடங்கிய இரகசிய உறையினைப் போட்டி இணைப்பாளர் சேகரித்து, போட்டிகளுக்கான அலுவலகத்தில் உள்ள பிரதம பதிவாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

11.7 பிரதம பதிவாளர் ஏனைய உதவிப் பதிவாளர்களுடன் புள்ளி விபரத்தாளில் நடுவர்களால் இடப்பட்ட புள்ளிகளையும் நிலைகளையும் சரிபார்த்து, இறுதி நிலையினைக் கணித்துப் பதிவு செய்தல் வேண்டும்.

11.8 இறுதி நிலையினைக் கணிப்பிடும் வரையில் குறித்த போட்டியில் நடுவர்களாகக் கடமையாற்றியவர்கள் வெளியேறிச் செல்லமுடியாது.

11.9 இறுதிப் பெறுபேறுகள் போட்டிப் பொறுப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் வெளியிடப்படும்.

11.10 நடுவர்கள் மற்றும் இணைப்பாளர்கள் போட்டிகள் / போட்டி முடிவுகள் தொடர்பில் இரகசியம் பேணுதல் வேண்டும்.

## 12.0 முறைப்பாடுகள் :

12.1 **போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும். நடுவர்களின் தீர்ப்புகள் தொடர்பில் மேன்முறையீடுகளுக்கு இடமில்லை.**

12.2 எனினும் **போட்டி ஒழுங்கமைப்பில்** சுற்றுநிருப விதிமுறைகளுக்கு முரணான செயற்பாடுகள் ஏதேனும் இடம்பெற்றிருப்பின்,

12.2.1 பாடசாலை மட்டப் போட்டிகளின் போது, குறித்த போட்டிக்குப் பொறுப்பாக உள்ள ஆசிரியரால்

12.2.2 வலய மட்டப் போட்டிகளின் போது, கோட்டக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் குறித்த பாடசாலை அதிபரால்

12.2.3 மாகாண மட்டப் போட்டிகளின் போது, வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது வலயப் போட்டி இணைப்பாளரின் சிபார்சுடன் குறித்த பாடசாலை அதிபரால்

12.2.4 தேசிய மட்டப் போட்டிகளின் போது, மாகாணக் கல்விப் பணிப்பாளர் அல்லது மாகாணப் போட்டி இணைப்பாளரின் சிபார்சுடன் குறித்த பாடசாலை அதிபரால்

12.2.5 போட்டி முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கு முன்னதாக போட்டிப் பொறுப்பாளரிடம் தமது முறைப்பாட்டினை **எழுத்துமூலம், தகுந்த ஆதாரங்களுடன்** ஒப்படைத்தல் வேண்டும்.

**12.2.6 மேலே குறிப்பிடப்பட்ட ஒழுங்குமுறைக்கு மாறாக, போட்டிகள் சம்பந்தமாக மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஏனையவர்களின் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

## 13.0 போட்டியாளர் தகைமைகள் :

13.1 அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் மாத்திரம் இப்போட்டிகளில் பங்குபற்றமுடியும்.

13.2 பாடசாலை மட்டம் முதல் தேசியமட்டம் வரை ஒரு போட்டியாளர் ஒரு பாடசாலை சார்பாகவே பங்குபற்றுதல் வேண்டும். ஒரு பாடசாலை சார்பாகப் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்ட ஒரு போட்டியாளர் பின்னர் வேறொரு பாடசாலையில் கல்வி பயின்றால், அப்போட்டியாளர் போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பை இழந்து விடுவார்.

13.3 விதிக்கப்பட்ட பிரிவுகளுக்குரிய தரங்களில் கல்வி பயில்பவராக இருத்தல் வேண்டும்.

13.4 முதற் தடவையாகக் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றிய ஒருவர் அடுத்த வருடம் திறந்த போட்டிகளில் மாத்திரம் பங்குபற்றமுடியும்.

13.5 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு முதல் முறையாகத் தோற்றிய மாணவர், அடுத்த வருடம் இடம்பெறும் எந்தவொரு போட்டியிலும் பங்குபற்ற முடியாது.

13.6 போட்டியாளர் ஒவ்வொருவரும் தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்கும் வகையில் தேசிய அடையாள அட்டையை அல்லது அஞ்சல் அறிமுக அட்டையை அல்லது பாடசாலை அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகிய இருவராலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட போட்டியாளரின் நிழற்படம் ஒன்றினை ஒவ்வொரு மேனிலைப் போட்டியிலும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**13.7 சகல மட்டப் போட்டிகளின் போதும் போட்டியாளர்கள் பொறுப்பாசிரியருடனேயே போட்டிகளில் கலந்துகொள்ளல் வேண்டும்.**

## 14.0 கலந்து கொள்ளும் போட்டிகளின் வரையறை :

14.1 ஒரு போட்டியாளர் குறிப்பிட்ட ஒரு பிரிவிற்குரிய தனிப் போட்டி ஒன்றிலும், திறந்த போட்டி அல்லது குழுப்போட்டி ஒன்றிலுமாக **இரு போட்டிகளில் மாத்திரம்** கலந்து கொள்ளலாம்.

14.2 போட்டியாளர் ஒருவர் ஒரு பிரிவிலிருந்து, ஒரு தனிப்போட்டியில் ஒருமுறை மாத்திரம் பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார். எனினும் அடுத்த வருடம் அதே பிரிவில் வேறொரு தனிப்போட்டியில் பங்குபற்ற முடியும். **இவ்விதி வலய, மாகாண மற்றும் தேசிய மட்டப் போட்டிகளின் போது கண்டிப்பாகப் பின்பற்றப்படவேண்டும்.**

14.3 திறந்த அல்லது குழுப் போட்டி ஒன்றில் ஒருமுறை பங்குபற்றி வலய, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களில் ஏதாவது **ஒன்றைப் பெற்றிருந்தால்** அக்குழு அல்லது அக்குழுவில் இடம்பெற்ற போட்டியாளர் ஒருவர் அடுத்த வருடம் நடைபெறும் அதே போட்டியில் பங்குபற்றுவதற்கு அனுமதியில்லை. எனினும் அக்குழு அல்லது அக்குழுவில் இடம்பெற்ற போட்டியாளர் ஒருவர் வேறொரு குழு அல்லது திறந்த போட்டியில் பங்குபற்றமுடியும். மேலும் அக்குழு அல்லது அக்குழுவில் இடம்பெற்ற போட்டியாளர் ஒருவர், ஒரு வருடத்தடையின் பின் அதே போட்டியில் பங்குபற்ற முடியும். **இவ்விதி வலய, மாகாண மற்றும் தேசிய மட்டப் போட்டிகளின் போது கண்டிப்பாகப் பின்பற்றப்படவேண்டும்.**

14.4 ஒரு பாடசாலை இருபத்தைந்து (25) போட்டிகளில் மாத்திரம் பங்குபற்றலாம். இவ் இருபத்தைந்து (25) போட்டிகளுக்குள் சகல பாடசாலைகளும் (பாடசாலையில் உள்ள தரங்களுக்கேற்ப) **தமிழறிவு வினாவிடைப் போட்டிகளில் கட்டாயம் கலந்துகொள்ளல் வேண்டும்.**

14.5 பாடசாலை மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை தனிப் போட்டி ஒன்றில் குறித்த ஒரு போட்டியாளரே பங்குபற்றவேண்டும். திறந்த அல்லது குழுப் போட்டிகளுக்கு மாத்திரம் தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் தகுந்த ஆதாரத்தின் மூலம் நிரூபிக்கும் பட்சத்தில் வலய

அல்லது மாகாணக் கல்விப் பணிப்பாளர் வேறொரு போட்டியாளரை அனுமதிக்கலாம். இது **வலய, மாகாண மற்றும் தேசிய மட்டப்** போட்டிகளுக்கும் பொருந்தும்.

## 15.0 மேனிலை மட்டப் போட்டிகள் :

15.1 பாடசாலை மட்டப் போட்டியில் முதல் இடத்தினைப் பெற்றுக்கொண்ட போட்டியாளர் அல்லது குழு மாத்திரம் வலய மட்டப் போட்டிகளுக்கு அனுப்பப்படல் வேண்டும்.

15.2 கோட்ட மட்டப் போட்டிகள் நடாத்தப்படின் இச்சுற்றுநிருபத்தின் **6.2.4 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள** அட்டவணை 1 இன் அடிப்படையில் போட்டியாளர் அல்லது குழு வலய மட்டப் போட்டிகளுக்கு அனுப்பப்படல் வேண்டும்.

15.3 வலய மட்டப் போட்டியில் முதல் இடத்தினைப் பெற்றுக்கொண்ட போட்டியாளர் அல்லது குழு மாத்திரம் மாகாண மட்டப் போட்டிகளுக்கு அனுப்பப்படல் வேண்டும்.

15.4 மாகாண மட்டப் போட்டியில் முதல் இடத்தினைப் பெற்றுக்கொண்ட போட்டியாளர் அல்லது குழு மாத்திரம் தேசிய மட்டப் போட்டிகளுக்கு அனுப்பப்படல் வேண்டும்.

15.5 போட்டி ஒன்றில் முதலாமிடத்தில் இருவர் அல்லது இரு குழுக்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பின் அவ்விருவரும் அல்லது இரு குழுக்களும் வேறொரு நடுவர் குழுவின் தேர்வுக்கு விடப்பட்டு முதலாம் இடத்திற்கான தீர்வு பெறப்பட்டு, அவர் அல்லது அக்குழு மேனிலைப் போட்டிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

15.6 யாதாயினும் போட்டி ஒன்றில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களில் ஒன்றைப் பெற்றுக்கொண்ட போட்டியாளர் அல்லது குழு, சுற்றுநிருப விதிமுறைகளுக்கு முரணாக போட்டிகளில் பங்குபற்றியிருந்தமை தொடர்பில் இச்சுற்றுநிருபத்தின் 12.2 இன் பிரகாரம் செய்யப்பட்ட முறைப்பாடு, ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டு, குறித்த போட்டியாளர் அல்லது குழு பெற்றுக்கொண்ட இடம் தகுதி நீக்கம் செய்யப்படின், அடுத்தடுத்த நிலையில் இடங்களைப் பெற்றுக்கொண்ட போட்டியாளர்களின் அல்லது குழுக்களின் இடங்களும் மாற்றியமைக்கப்பட்டு, **மேனிலைப் போட்டிகளில் பங்குபற்றுவதற்குரிய தகுதி தீர்மானிக்கப்படும்.**

## 16.0 விண்ணப்பப் படிவம் :

16.1 வலய, மாகாண, தேசிய மட்டப் போட்டிகளுக்கு அனுப்பப்படும் விண்ணப்பப் படிவங்கள் உரிய மாதிரிப் படிவத்தில் (Excel) முறையாகப் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

16.2 பாடசாலையின் பெயர், முகவரி, பாடசாலையின் தொலைபேசி இலக்கம், அதிபரின் கையடக்கத் தொலைபேசி இலக்கம், குறித்த போட்டிகளுக்கான பொறுப்பாசிரியரின் பெயர், அவரின் கையடக்கத் தொலைபேசி இலக்கம் என்பன கட்டாயம் குறிப்பிடப்பட்டு இருத்தல் வேண்டும். பாடசாலையின் பெயர் உரிய முதலெழுத்துக்களுடன் எழுதப்படல் வேண்டும். (உதாரணம்: மமா/ஹட்/................................)

16.3 சான்றிதழ்களில் பெயர் சரியாக இடம்பெறல் வேண்டும் என்பதால் பெயர்களின் முன் **செல்வன்** அல்லது **செல்வி** என்ற விபரம் குறிப்பிடப்பட்டு, **போட்டியாளரின் பெயர் முதலெழுத்துக்களுடன்** தமிழில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

16.4 **ஒவ்வொரு மட்டப் போட்டிகளுக்குமான விண்ணப்பப் படிவங்கள் குறித்த திகதிக்கு முன்னர் மென்பிரதிகளாக அனுப்பி வைக்கப்படுவதுடன் அதன் வன்பிரதிகள் உரிய அதிகாரியால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.**

16.5 போட்டிகளில் பங்குபற்றும் போட்டியாளர்களுக்கு மாத்திரமே சான்றிதழ்கள் வழங்கப்படும்.

16.6 நாட்டிய நாடகம், நாட்டார் பாடல், இலக்கிய நாடகம், வில்லுப்பாட்டு போட்டிகளுக்கான பிரதிகள் பின்வரும் அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்டு, மேனிலைப் போட்டிகளுக்கு அனுப்பப்படுதல் வேண்டும். பிரதிகளை உறுதிப்படுத்திச் சமர்ப்பிக்காத பட்சத்தில் மேனிலைப் போட்டிகளில் பங்குபற்றச் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

- பாடசாலை மட்டம் - போட்டிப் பொறுப்பாசிரியர்
- கோட்ட/வலய மட்டம் - பாடசாலை அதிபர்
- மாகாண மட்டம் - வலயக் கல்விப் பணிப்பாளர்
- தேசிய மட்டம் - மாகாணக் கல்விப் பணிப்பாளர்

16.7 மேனிலைப் போட்டிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட போட்டிகள், அப்போட்டிகளில் பங்குபற்ற முன்னர் வேறு நிகழ்ச்சிகளில் மேடையேற்ற முடியாது.

## 17.0 போட்டி பற்றிய விபரங்கள்

**அட்டவணை 2**

| **போ. இல** | **பிரிவு** | **தரங்கள்** | **போட்டியாளர் எண்ணிக்கை** | **போட்டியின் பெயர்** |
|---|---|---|---|---|
| 1 | 1 | 06, 07 | 01 | கட்டுரை வரைதல் |
| 2 | 2 | 08, 09 | 01 | கட்டுரை வரைதல் |
| 3 | 3 | 10, 11 | 01 | கட்டுரை வரைதல் |
| 4 | 4 | 12, 13 | 01 | கட்டுரை வரைதல் |
| 5 | 3 | 10, 11 | 01 | மொழிப்பிரயோகம் |
| 6 | 4 | 12, 13 | 01 | மொழிப்பிரயோகம் |
| 7 | 3 | 10, 11 | 01 | இலக்கணப் போட்டி |
| 8 | 4 | 12, 13 | 01 | இலக்கணப் போட்டி |
| 9 | 3 | 10, 11 | 01 | திறனாய்வுப் போட்டி |
| 10 | 4 | 12, 13 | 01 | திறனாய்வுப் போட்டி |
| 11 | 3 | 10, 11 | 01 | குறுநாடக ஆக்கம் |
| 12 | 4 | 12, 13 | 01 | குறுநாடக ஆக்கம் |
| 13 | 3 | 10, 11 | 01 | கவிதை ஆக்கம் |
| 14 | 4 | 12, 13 | 01 | கவிதை ஆக்கம் |
| 15 | 3 | 10, 11 | 01 | சிறுகதை ஆக்கம் |
| 16 | 4 | 12, 13 | 01 | சிறுகதை ஆக்கம் |
| 17 | 1 | 06, 07 | 05 | தமிழறிவு வினாவிடை - எழுத்து |
| 18 | 2 | 08, 09 | 05 | தமிழறிவு வினாவிடை - எழுத்து |
| 19 | 3 | 10, 11 | 05 | தமிழறிவு வினாவிடை - எழுத்து |
| 20 | 4 | 12, 13 | 05 | தமிழறிவு வினாவிடை - எழுத்து/வாய்மொழி |
| 21 | 1 | 06, 07 | 01 | வாசிப்பு |
| 22 | 2 | 08, 09 | 01 | வாசிப்பு |
| 23 | 1 | 06, 07 | 01 | பேச்சு |
| 24 | 2 | 08, 09 | 01 | பேச்சு |
| 25 | 3 | 10, 11 | 01 | பேச்சு |
| 26 | 4 | 12, 13 | 01 | பேச்சு |
| 27 | 1 | 06, 07 | 01 | பாவோதல் |
| 28 | 2 | 08, 09 | 01 | பாவோதல் |
| 29 | 3 | 10, 11 | 01 | இலக்கிய விமர்சனம் |
| 30 | 4 | 12, 13 | 01 | இலக்கிய விமர்சனம் |
| 31 | 3 | 10, 11 | 01 | அறிவிப்பாளர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 32 | 4 | 12, 13 | 01 | அறிவிப்பாளர் |
| 33 | 1 | 06, 07 | 01 | இசை - தனி |
| 34 | 2 | 08, 09 | 01 | இசை - தனி |
| 35 | 3 | 10, 11 | 01 | இசை - தனி |
| 36 | 4 | 12, 13 | 01 | இசை - தனி |
| 37 | குழு 1 | 06, 07, 08, 09 | 08-10 | இசை - குழு 1 |
| 38 | குழு 2 | 10, 11, 12, 13 | 08-10 | இசை - குழு 2 |
| 39 | 1 | 06, 07 | 01 | நடனம் - தனி |
| 40 | 2 | 08, 09 | 01 | நடனம் - தனி |
| 41 | 3 | 10, 11 | 01 | நடனம் - தனி |
| 42 | 4 | 12, 13 | 01 | நடனம் - தனி |
| 43 | குழு 1 | 06, 07, 08, 09 | 08-12 | நடனம் - குழு 1 |
| 44 | தி.போ | 06-13 | 08-12 | நாட்டிய நாடகம் |
| 45 | 3 | 10, 11 | 01 | தனிநடிப்பு |
| 46 | 4 | 12, 13 | 01 | தனிநடிப்பு |
| 47 | தி.போ | 06-13 | 06-08 | நாட்டார் பாடல் |
| 48 | தி.போ | 06-13 | 08-12 | இலக்கிய நாடகம் |
| 49 | தி.போ | 06-13 | 07 | வில்லுப்பாட்டு |
| 50 | தி.போ | 06-13 | 03 | விவாதம் |

## 18. 0 போட்டிப் பிரிவுகளும் தரங்களும் (அட்டவணை 3)

| தொ இல | போட்டிப் பிரிவுகள் | தரங்கள் |
|---|---|---|
| 1 | முதலாம் பிரிவு | 06, 07 |
| 2 | இரண்டாம் பிரிவு | 08, 09 |
| 3 | மூன்றாம் பிரிவு | 10, 11 |
| 4 | நான்காம் பிரிவு | 12, 13 |
| 5 | குழு - 1 | 06, 07, 08, 09 |
| 6 | குழு - 2 | 10, 11, 12, 13 |
| 8 | திறந்த போட்டிகள் | 06 - 13 |

**19.0 போட்டி இல : 01 கட்டுரை வரைதல். முதலாம் பிரிவு – தரங்கள் 06, 07**

**19.1. விடயம் :**

19.1.1 போட்டி நடைபெறும் இடத்தில் வழங்கப்படும் நான்கு தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து கட்டுரை எழுதுதல் வேண்டும்.

19.1.2 தலைப்புகள் தமிழ்மொழி, இலக்கியம், தமிழறிஞர்கள் மற்றும் நவீன தொழில்நுட்பமும் தமிழ்மொழியும் ஆகிய விடயப்பரப்புக்களிலிருந்து வழங்கப்படும்.

19.1.3 சொற்கள் : 130 - 150 சொற்களுக்குள் இருத்தல் வேண்டும்.

**19.2. நேரம் :** ஒரு மணித்தியாலம்.

**19.3. புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 4 ஐப் பார்க்க)

**20.0 போட்டி இல : 02 கட்டுரை வரைதல். இரண்டாம் பிரிவு – தரங்கள் 08, 09**

**20.1. விடயம் :**

20.1.1 போட்டி நடைபெறும் இடத்தில் வழங்கப்படும் நான்கு தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்து கட்டுரை எழுதுதல்.

20.1.2 தலைப்புகள் தமிழ்மொழி, இலக்கியம், தமிழறிஞர்கள் மற்றும் நவீன தொழில்நுட்பமும் தமிழ்மொழியும் ஆகிய விடயப்பரப்புக்களிலிருந்து வழங்கப்படும்.

20.1.3 சொற்கள் : 150 - 200 சொற்களுக்குள் இருத்தல் வேண்டும்.

**20.2 நேரம் :** ஒரு மணித்தியாலம்.

**20.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 4 ஐப் பார்க்க)

**21.0 போட்டி இல : 03 கட்டுரை வரைதல் மூன்றாம் பிரிவு – தரங்கள் 10, 11**

**21.1 விடயம் :**

21.1.1 போட்டி நடைபெறும் இடத்தில் வழங்கப்படும் நான்கு தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவுசெய்து கட்டுரை எழுதுதல் வேண்டும்.

21.1.2 தலைப்புகள் தமிழ்மொழி வரலாறு, இலக்கியம், இலக்கணம், தமிழ் வளர்த்த சான்றோர்கள், நவீன தொழில்நுட்பமும் தமிழ்மொழியும் மற்றும் சமகாலத்தில் தமிழ்மொழியின் பரம்பல் ஆகிய விடயப்பரப்புக்களிலிருந்து வழங்கப்படும்.

21.1.3 சொற்கள் : 250 – 300 சொற்களுக்குள் இருத்தல் வேண்டும்.

**21.2 நேரம் :** ஒரு மணி முப்பது நிமிடம்

**21.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 4 ஐப்பார்க்க)

**22.0 போட்டி இல : 04 கட்டுரை வரைதல் நான்காம் பிரிவு – தரங்கள் 12,13**

**22.1. விடயம் :**

22.1.1 போட்டி நடைபெறும் இடத்தில் வழங்கப்படும் நான்கு தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவுசெய்து கட்டுரை எழுதுதல் வேண்டும்.

22.1.2 தலைப்புகள் தமிழ்மொழி வரலாறு, இலக்கியம், இலக்கணம், தமிழ் வளர்த்த சான்றோர்கள், நவீன தொழில்நுட்பமும் தமிழ்மொழியும் மற்றும் சமகாலத்தில் தமிழ்மொழியின் பரம்பல் ஆகிய விடயப்பரப்புக்களிலிருந்து வழங்கப்படும்.

22.1.3 சொற்கள் : 300 – 350 சொற்களுக்குள் இருத்தல் வேண்டும்.

**22.2 நேரம் :** இரண்டு மணித்தியாலம்.

**22.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 4 ஐப்பார்க்க)

**அட்டவணை 4**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | பொருள் (விடய உள்ளடக்கம்) | 25 |
| ii | கருத்தொழுங்கு | 20 |
| iii | மொழிச்செம்மை | 20 |
| iv | அமைப்பு ((முகவுரை, உள்ளடக்கம், முடிவுரை) | 15 |
| v | உறுப்பமைவும் நேர்த்தியும் | 10 |
| vi | வழுக்களின்மை, நிறுத்தக்குறிகள் | 10 |
| | **மொத்தம்** | **100** |

**23.0 போட்டி இல : 05 மொழிப்பிரயோகம் மூன்றாம் பிரிவு – தரங்கள் 10, 11**

**23.1 விடயம் :**

23.1.1 மாணவர்களிடையே மொழித்திறன் மற்றும் கிரகித்தலை விருத்தி செய்யும் நோக்கில் இப்போட்டி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எழுத்துப் பரீட்சையாகவே இப்போட்டி இடம்பெறும்.

23.1.2 இவ்வினாப்பத்திரம் இரண்டு வினாக்களைக் கொண்டிருக்கும்.

23.1.3 முதலாம் வினாவில் தரப்படும் செய்யுள் பகுதி அல்லது உரைநடைப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு வினவப்படும் 10 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

23.1.4 இரண்டாம் வினாவில் தரப்படும் உரைநடைப் பகுதியை 40 - 45 சொற்களில் சுருக்கி எழுதுதல் வேண்டும்.

**23.2 நேரம் :** ஒரு மணித்தியாலம்.

**23.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 5 ஐப் பார்க்க)

**24.0 போட்டி இல : 06 மொழிப்பிரயோகம் நான்காம் பிரிவு – தரங்கள் 12, 13**

**24.1 விடயம் :**

24.1.1 மாணவர்களிடையே மொழித்திறன் மற்றும் கிரகித்தலை விருத்தி செய்யும் நோக்கில் இப்போட்டி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எழுத்துப் பரீட்சையாகவே இப்போட்டி இடம்பெறும்.

24.1.2 இவ்வினாப்பத்திரம் இரண்டு வினாக்களைக் கொண்டிருக்கும்.

24.1.3 முதலாம் வினாவில் தரப்படும் செய்யுள் பகுதி அல்லது உரைநடைப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு வினவப்படும் 10 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

24.1.4 இரண்டாம் வினாவில் தரப்படும் உரைநடைப் பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுதல் வேண்டும்.

**24.2 நேரம் :** ஒரு மணித்தியாலம்.

**24.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 5 ஐப்பார்க்க)

**அட்டவணை 5**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | **கிரகித்தல்**<br>• 1-2 வினாக்கள் - 2x3=06 புள்ளிகள்<br>• 3-8 வினாக்கள் - 6x5=30 புள்ளிகள்<br>• 9-10 வினாக்கள் - 2x7=14 புள்ளிகள் | 50 |
| 2 | **சுருக்கம்**<br>• விடய உள்ளடக்கம் - 30<br>• சொல்லளவு - 10<br>• மொழிநடை - 10 | 50 |
| | **மொத்தம்** | **100** |

**25.0 போட்டி இல : 07 இலக்கணப் போட்டி மூன்றாம் பிரிவு – தரங்கள் 10, 11**

**25.1 விடயம் :**

25.1.1 மாணவர்களிடையே இலக்கண அறிவை விருத்தி செய்யும் நோக்கில் இப்போட்டி நடாத்தப்படுகின்றது. எழுத்துப் பரீட்சையாகவே இப்போட்டி இடம்பெறும்.

25.1.2 இவ்வினாப்பத்திரம் 50 வினாக்களைக் கொண்டிருக்கும்.

- 1-20 வரை பல்தேர்வு வினாக்கள்
- 21-40 வரை ஒரு சொல்லில் மாத்திரம் விடையளிக்கக் கூடிய வினாக்கள்
- 41-50 வரை சுருக்கமாக விடையளிக்கக் கூடிய வினாக்கள்

25.1.3 தொல்காப்பியம், நன்னூல், இலக்கணச்சுருக்கம் ஆகிய இலக்கண நூல்களையும் பாடநூல்களையும் துணையாகக் கொண்டு வினாக்கள் தயாரிக்கப்படும்.

**25.2 நேரம் :** இரண்டு மணித்தியாலம்

**25.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 6 ஐப்பார்க்க)

**26.0 போட்டி இல : 08 இலக்கணப் போட்டி நான்காம் பிரிவு – தரங்கள் 12, 13**

**26.1 விடயம் :**

26.1.1 மாணவர்களிடையே இலக்கண அறிவை விருத்தி செய்யும் நோக்கில் இப்போட்டி நடாத்தப்படுகின்றது. எழுத்துப் பரீட்சையாகவே இப்போட்டி இடம்பெறும்.

26.1.2 இவ்வினாப்பத்திரம் 50 வினாக்களைக் கொண்டிருக்கும்.

- 1-20 வரை பல்தேர்வு வினாக்கள்
- 21-40 வரை ஒரு சொல்லில் மாத்திரம் விடையளிக்கக் கூடிய வினாக்கள்
- 41-50 வரை சுருக்கமாக விடையளிக்கக் கூடிய வினாக்கள்

26.1.3 தொல்காப்பியம், நன்னூல், இலக்கணச்சுருக்கம் ஆகிய இலக்கண நூல்களையும் தரம் 12, 13 தமிழ்ப் பாடத்திட்டத்தையும் துணையாகக் கொண்டு வினாக்கள் தயாரிக்கப்படும்.

**26.2 நேரம் :** இரண்டு மணித்தியாலம்

**26.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 6 ஐப்பார்க்க)

**அட்டவணை 6**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | 1-20 வரை 20x 01 | 20 |
| ii | 21-40 வரை 20 x 02 | 40 |
| | 41-50 வரை 10 x 04 | 40 |
| | **மொத்தம்** | **100** |

**27.0 போட்டி இல : 09 திறனாய்வுப் போட்டி மூன்றாம் பிரிவு – தரங்கள் 10, 11**

**27.1 விடயம் :**

27.1.1 மாணவர்களிடையே திறனாய்வு தொடர்பான அறிவை வளர்க்கும் நோக்குடன் இப்போட்டி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

27.1.2 சிறுகதை, புதுக்கவிதை ஆகிய இலக்கிய வடிவங்களில் ஒன்று திறனாய்வுக்காகப் போட்டி நடைபெறும் இடத்தில் வழங்கப்படும். போட்டியாளர் அந்த இலக்கியத்தை வாசித்துத் திறனாய்வு செய்யவேண்டும்.

27.1.3 சொற்களின் எண்ணிக்கை : கட்டுப்பாடில்லை

**27.2 நேரம் :** மூன்று மணித்தியாலம்

**27.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 7 ஐப்பார்க்க)

**28.0 போட்டி இல : 10 திறனாய்வுப் போட்டி நான்காம் பிரிவு – தரங்கள் 12, 13**

**28.1 விடயம் :**

28.1.1 மாணவர்களிடையே திறனாய்வு தொடர்பான அறிவை வளர்க்கும் நோக்குடன் இப்போட்டி நடாத்தப்படுகின்றது.

28.1.2 சிறுகதை, புதுக்கவிதை ஆகிய இலக்கிய வடிவங்களில் ஒன்று திறனாய்வுக்காகப் போட்டி நடைபெறும் இடத்தில் வழங்கப்படும். அந்த இலக்கியத்தைப் போட்டியாளர் வாசித்துத் திறனாய்வு செய்ய வேண்டும்.

28.1.3 சொற்களின் எண்ணிக்கை : கட்டுப்பாடில்லை

**28.2 நேரம் :** மூன்று மணித்தியாலம்

**28.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 7 ஐப்பார்க்க)

**அட்டவணை 7**

| **இல** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | அமைப்பு | 20 |
| ii | பகுப்பாய்வுத் திறன் | 20 |
| iii | தர்க்கரீதியான முன்வைப்பு | 30 |
| iv | இலக்கியபூர்வமான அனுபவம் | 20 |
| v | மொழிநடை | 10 |
| | **மொத்தம்** | **100** |

## 29.0 போட்டி இல : 11 குறுநாடக ஆக்கம் மூன்றாம் பிரிவு – தரங்கள் 10, 11

**29.1 விடயம் :**

29.1.1 போட்டி நடைபெறும் இடத்தில் தரப்படும் நான்கு தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்து, நாடக எழுத்துரு ஒன்றினை ஆக்குதல் வேண்டும்.

29.1.2 நாடக எழுத்துரு சமயம், மொழி, இனம் மற்றும் அரசியல் சார்ந்த **விரும்பத்தகாத கருத்துக்கள்** இடம்பெறா வண்ணம் அமைதல் வேண்டும்.

29.1.3 நாடகப் பிரதி 15 – 20 நிமிடங்களுக்குள் மேடையேற்றக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

29.1.4 நாடகப் பிரதி ஓரங்க நாடகமாகவோ அல்லது நான்கு காட்சிகளுக்கு மேற்படாமலோ அமைதல் வேண்டும்.

**29.2 நேரம் : இரண்டு மணித்தியாலம்**

**29.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 8 ஐப்பார்க்க)

## 30.0 போட்டி இல : 12 குறுநாடக ஆக்கம் நான்காம் பிரிவு – தரங்கள் 12, 13

**30.1 விடயம் :**

30.1.1 போட்டி நடைபெறும் இடத்தில் தரப்படும் நான்கு தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்து, நாடக எழுத்துரு ஒன்றினை ஆக்குதல் வேண்டும்.

30.1.2 நாடக எழுத்துரு சமயம், மொழி, இனம், கலாசாரம் மற்றும் அரசியல் சார்ந்த **விரும்பத்தகாத கருத்துக்கள்** இடம்பெறா வண்ணம் அமைதல் வேண்டும்.

30.1.3 நாடகப் பிரதி 15 – 20 நிமிடங்களுக்குள் மேடையேற்றக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

30.1.4 நாடகப் பிரதி ஓரங்க நாடகமாகவோ அல்லது நான்கு காட்சிகளுக்கு மேற்படாமலோ அமைதல் வேண்டும்.

**30.2 நேரம் : இரண்டு மணித்தியாலம்**

**30.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 8 ஐப்பார்க்க)

**அட்டவணை 8**

| **இல** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | புத்தாக்கத்திறன் | 20 |
| ii | முகிழ்க்கும் செய்தி | 30 |
| iii | உரையாடல் அமைப்பு | 20 |
| iv | பாத்திர உருவாக்கம் | 15 |
| v | மேடைக் குறிப்பு | 15 |
| | **மொத்தம்** | **100** |

**31.0 போட்டி இல : 13 கவிதை ஆக்கம். மூன்றாம் பிரிவு தரங்கள் 10, 11**

**31.1 விடயம் :**

31.1.1 போட்டி நடைபெறும் இடத்தில் வழங்கப்படும் நான்கு கவிதைத் தலைப்புக்களுள் ஒன்றினைத் தெரிவு செய்து கவிதை ஆக்கம் செய்தல் வேண்டும்.

31.1.2 கவிதை 100 வரிகளுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

31.1.3 சமயம், மொழி, இனம், கலாசாரம் மற்றும் அரசியல் சார்ந்த **விரும்பத்தகாத கருத்துக்கள்** இடம்பெறா வண்ணம் கவிதை அமைதல் வேண்டும்.

31.1.4 பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் சமூக ஊடகங்களில் வெளியானவையாகவோ அல்லது வேறு போட்டிகளில் எழுதப்பட்ட கவிதைகளாகவோ இல்லாது, போட்டியாளரின் **புத்தாக்கமாக** அமைதல் வேண்டும்.

**31.2 நேரம் :** இரண்டு மணித்தியாலம்

**31.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 9 ஐப்பார்க்க)

**32.0 போட்டி இல : 14 கவிதை ஆக்கம். நான்காம் பிரிவு தரங்கள் 12, 13**

**32.1 விடயம் :**

32.1.1 போட்டி நடைபெறும் இடத்தில் வழங்கப்படும் நான்கு கவிதைத் தலைப்புக்களுள் ஒன்றினைத் தெரிவு செய்து கவிதை ஆக்கம் செய்தல் வேண்டும்.

32.1.2 கவிதை 150 வரிகளுக்குக் குறையாமல் அமைதல் வேண்டும்.

32.1.3 சமயம், மொழி, இனம், கலாசாரம் மற்றும் அரசியல் சார்ந்த **விரும்பத்தகாத கருத்துக்கள்** இடம்பெறா வண்ணம் கவிதை அமைதல் வேண்டும்.

32.1.4 பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் சமூக ஊடகங்களில் வெளியானவையாகவோ அல்லது வேறு போட்டிகளில் எழுதப்பட்ட கவிதைகளாகவோ இல்லாது, போட்டியாளரின் **புத்தாக்கமாக** அமைதல் வேண்டும்.

**32.2 நேரம் :** இரண்டு மணித்தியாலம்

**32.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 9 ஐப்பார்க்க)

**அட்டவணை 9**

| **இல** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | பொருட்செறிவு | 25 |
| ii | புத்தாக்கத்திறன் | 25 |
| iii | யதார்த்த உணர்வு | 20 |
| iv | கவித்துவமும் வடிவமும் | 20 |
| v | மொழிநடை | 10 |
| | **மொத்தம்** | **100** |

**33.0 போட்டி இலக்கம் : 15 சிறுகதை ஆக்கம் மூன்றாம் பிரிவு தரங்கள் 10, 11**

**33.1 விடயம் :**

33.1.1 போட்டி நடைபெறும் இடத்தில் தரப்படும் கதைக்கருக்கள் நான்கினுள் ஒன்றினைத் தெரிவு செய்து சிறுகதை ஆக்குதல் வேண்டும். கதைக்குப் பொருத்தமான தலைப்பு இடப்படல் வேண்டும்.

33.1.2 சொற்களின் எண்ணிக்கை : 250 சொற்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

33.1.3 சமயம், மொழி, இனம், கலாசாரம் மற்றும் அரசியல் சார்ந்த **விரும்பத்தகாத கருத்துக்கள்** இடம்பெறா வண்ணம் சிறுகதை அமைதல் வேண்டும்.

**33.2 நேரம் : இரண்டு மணித்தியாலம்**

**33.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 10 ஐப்பார்க்க)

**34.0 போட்டி இலக்கம் : 16 சிறுகதை ஆக்கம் நான்காம் பிரிவு தரங்கள் 12, 13**

**34.1. விடயம் :**

34.1.1 போட்டி நடைபெறும் இடத்தில் தரப்படும் கதைக்கருக்கள் நான்கினுள் ஒன்றினைத் தெரிவு செய்து சிறுகதை ஆக்குதல் வேண்டும். கதைக்குப் பொருத்தமான தலைப்பு இடப்படல் வேண்டும்.

34.1.2 சொற்களின் எண்ணிக்கை : 300 சொற்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

34.1.3 சமயம், மொழி, இனம், கலாசாரம் மற்றும் அரசியல் சார்ந்த **விரும்பத்தகாத கருத்துக்கள்** இடம்பெறா வண்ணம் சிறுகதை அமைதல் வேண்டும்.

**34.2 நேரம் : இரண்டு மணித்தியாலம்**

**34.3 புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகள் (அட்டவணை 10 ஐப்பார்க்க)

**அட்டவணை 10**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | தலைப்பும் உள்ளடக்கமும் | 25 |
| ii | கற்பனையும் புத்தாக்கமும் | 25 |
| iii | அமைப்பு | 20 |
| iv | கதைப்பின்னல் | 20 |
| v | மொழிநடை | 10 |
| | **மொத்தம்** | **100** |

**35.0 போட்டி இலக்கம் : 17 தமிழறிவு வினாவிடை – எழுத்து**
**முதலாம் பிரிவு தரங்கள் 06, 07**

**35.1 விடயம் :**

35.1.1 தரங்கள் 06, 07 மாணவர்களிடையே தமிழ்மொழி இலக்கண, இலக்கிய அறிவை விருத்தி செய்வதற்காக இப்போட்டி நடாத்தப்படுகின்றது.

35.1.2 இப்போட்டி எழுத்துப் பரீட்சையாகவே இடம்பெறும்.

35.1.3 தரங்கள் 06, 07 தமிழ்மொழியும் இலக்கியமும் பாடநூல்கள்/ மொடியூல்களைத் தழுவியவையாக வினாக்கள் அமைந்திருக்கும்.

35.1.4 இவ்வினாப்பத்திரம் 40 வினாக்களைக் கொண்டிருக்கும்.

- 1-20 வரை பல்தேர்வு வினாக்கள்
- 21-40 வரை சுருக்கமாக விடையளிக்கக் கூடிய வினாக்கள்

**35.1.5 பாடநூல்கள்/ மொடியூல்களில் உள்ள அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய வகையில் வினாக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.**

35.1.6 இப்போட்டியில் போட்டியாளர்கள் குழுவாகவே பங்குகொள்ள முடியும். ஒவ்வொரு வகுப்பில் இருந்தும் **ஆகக் குறைந்தது இருவராவது** குழுவில் இடம்பெறல் வேண்டும்.

35.1.7 ஒரு குழுவிலுள்ள ஐந்து மாணவர்களும் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையிலேயே வெற்றி தீர்மானிக்கப்படும்.

**35.2 நேரம் : ஒரு மணித்தியாலம்**

**35.3 புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகள் (அட்டவணை 11 ஐப்பார்க்க)

**36.0 போட்டி இலக்கம் : 18 தமிழறிவு வினாவிடை – எழுத்து**
**இரண்டாம் பிரிவு தரங்கள் 08, 09**

**36.1 விடயம் :**

36.1.1 தரங்கள் 08, 09 மாணவர்களிடையே தமிழ்மொழி இலக்கண, இலக்கிய அறிவை விருத்தி செய்வதற்காக இப்போட்டி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

36.1.2 இப்போட்டி எழுத்துப் பரீட்சையாகவே இடம்பெறும்.

36.1.3 தரங்கள் 08, 09 தமிழ்மொழியும் இலக்கியமும் பாடநூல்கள்/ மொடியூல்களைத் தழுவியவையாக வினாக்கள் அமைந்திருக்கும்.

36.1.4 இவ்வினாப்பத்திரம் 40 வினாக்களைக் கொண்டிருக்கும்.

- 1-20 வரை பல்தேர்வு வினாக்கள்
- 21-40 வரை சுருக்கமாக விடையளிக்கக் கூடிய வினாக்கள்

**36.1.5 பாடநூல்கள்/ மொடியூல்களில் உள்ள அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய வகையில் வினாக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.**

36.1.6 இப்போட்டியில் போட்டியாளர்கள் குழுவாகவே பங்குகொள்ள முடியும். ஒவ்வொரு வகுப்பில் இருந்தும் **ஆகக் குறைந்தது இருவராவது** குழுவில் இடம்பெறல் வேண்டும்.

36.1.7 ஒரு குழுவிலுள்ள ஐந்து மாணவர்களும் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையிலேயே வெற்றி தீர்மானிக்கப்படும்.

**36.2 நேரம் : ஒரு மணித்தியாலம்**

**36.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 11 ஐப்பார்க்க)

**அட்டவணை 11**

| **இல** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| 1 | வினாக்கள் 1-20 வரை | 2 x 20 = 40 |
| 2 | வினாக்கள் 21-40 வரை | 3 x 20 = 60 |
| **மொத்தம்** | | **100** |

## 37.0 போட்டி இலக்கம் : 19 தமிழறிவு வினாவிடை – எழுத்து மூன்றாம் பிரிவு தரங்கள் 10, 11

**37.1 விடயம் :**

37.1.1 தரங்கள் 10, 11 மாணவர்களிடையே தமிழ்மொழி இலக்கண, இலக்கிய அறிவை விருத்தி செய்வதற்காகவும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்திவீதத்தை அதிகரிக்கும் நோக்குடனும் இப்போட்டி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

37.1.2 இப்போட்டி எழுத்துப் பரீட்சையாகவே இடம்பெறும்.

37.1.3 தரம் 10, 11 தமிழ் இலக்கியத் தொகுப்பு, தமிழ்மொழியும் இலக்கியமும் பாடநூல்கள்/மொடியூல்களைத் தழுவியவையாக வினாக்கள் அமைந்திருக்கும்.

37.1.4 இவ்வினாப்பத்திரம் 50 வினாக்களைக் கொண்டிருக்கும்.

- 1-25 வரை பல்தேர்வு வினாக்கள்
- 26-50 வரை சுருக்கமாக விடையளிக்கக் கூடிய வினாக்கள்

**37.1.5 பாடநூல்கள்/ மொடியூல்களில் உள்ள அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய வகையில் வினாக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.**

37.1.6 இப்போட்டியில் போட்டியாளர்கள் குழுவாகவே பங்குகொள்ள முடியும். ஒவ்வொரு தரத்தில் இருந்தும் **ஆகக் குறைந்தது இருவராவது** குழுவில் இடம்பெறல் வேண்டும்.

37.1.7 ஒரு குழுவிலுள்ள ஐந்து மாணவர்களும் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையிலேயே வெற்றி தீர்மானிக்கப்படும்.

**37.2 நேரம் : ஒரு மணி முப்பது நிமிடம்**

**37.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 12 ஐப்பார்க்க)

**அட்டவணை 12**

| **இல** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| 1 | வினாக்கள் 1-25 வரை | 1 x 25 = 25 |
| 2 | வினாக்கள் 26-50 வரை | 3 x 25 = 75 |
| **மொத்தம்** | | **100** |

## 38.0 போட்டி இலக்கம் : 20 தமிழறிவு வினாவிடை – எழுத்து/வாய்மொழி
## நான்காம் பிரிவு தரங்கள் 12, 13

### 38.1 விடயம் :

38.1.1 தரங்கள் 12, 13 மாணவர்களிடையே தமிழ்மொழி இலக்கண, இலக்கிய அறிவை விருத்தி செய்வதற்காகவும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தி வீதத்தை அதிகரிக்கும் நோக்குடனும் இப்போட்டி நடாத்தப்படுகின்றது.

38.1.2 சங்க காலம் தொட்டு தற்காலம் வரை எழுந்த தமிழிலக்கியங்கள், ஈழத்து இலக்கியங்கள், இலக்கணங்கள் புலம்பெயர் இலக்கியங்கள் மற்றும் நவீன மொழியியல் என்பவற்றிலிருந்து வினாக்கள் தயாரிக்கப்படும்.

38.1.3 இப்போட்டி இரண்டு கட்டங்களாக நடைபெறும்.

**1. எழுத்துப் பரீட்சை**

1.1 இப்போட்டியில் பங்குபற்றும் சகல குழுக்களும் எழுத்துப் பரீட்சையில் பங்குபற்ற வேண்டும்.

1.2 எழுத்துப் போட்டிக்கான வினாத்தாள் 30 வினாக்களைக் கொண்டதாக அமையும்.

- 1-10 வரையான வினாக்கள் - தமிழக இலக்கிய வரலாறு
- 11-20 வரையான வினாக்கள் - ஈழத்து இலக்கிய வரலாறு
- 21-30 வரையான வினாக்கள் - இலக்கணம்

1.3 வினாக்கள் வெகுசுட்டிப்பானவையாகவும், தெளிவாகவும், விளக்கம் உடையனவாகவும், சுருக்க விடைகள் தரக் கூடியனவாகவும் இருத்தல் வேண்டும்.

1.4 1 வினாவுக்கு 1 புள்ளி வீதம் மொத்தம் 30 புள்ளிகள் வழங்கப்படும்.

1.5 ஒரு குழுவிலுள்ள ஐந்து மாணவர்களும் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் குழுக்கள் வரிசைப்படுத்தப்பட்டு கூடிய புள்ளிகளைப் பெற்ற **முதல் 4 குழுக்கள் வாய்மொழிப் போட்டிக்குத் தகைமை பெறும்.**

**1.6 நேரம்: நாற்பத்தைந்து நிமிடங்கள்**

**2. வாய்மொழிப்போட்டி**

2.1 எழுத்துப் போட்டியில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் 4 குழுக்களும் வரிசைப்படுத்தப்பட வேண்டும்.


2.2 இதில் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்ற குழுக்கள் **தகுதிச்சுற்று 1 இலும்** மூன்றாம் நான்காம் இடங்களைப் பெற்ற குழுக்கள் **விலகல் சுற்றிலும்** கலந்துகொள்ளவேண்டும்.

2.3 தகுதிச் சுற்றில் வெற்றி பெறும் குழு நேரடியாக **இறுதிப் போட்டிக்குத்** தகைமை பெறும்.

2.4 விலகல் சுற்றில் தோல்வி அடையும் குழு போட்டித் தொடரிலிருந்து வெளியேறும்.

2.5 விலகல் சுற்றில் வெற்றி பெறும் குழு தகுதிச் சுற்றில் தோல்வியடைந்த குழுவுடன் தகுதிச்சுற்று 2 இல் போட்டியிடும். இப்போட்டியில் வெற்றிபெறும் அணி இறுதிப் போட்டிக்குத் தகைமை பெறும். தோல்வியடையும் அணி **மூன்றாம் இடத்தினைப் பெற்றுக்கொள்ளும்.**

2.6 இறுதிப்போட்டியில் வெற்றி பெறும் குழு **முதலாம் இடத்தினையும்** தோல்வியடையும் குழு **இரண்டாம் இடத்தினையும்** பெற்றுக்கொள்ளும்.




38.2 இப்போட்டிக்கு 3 அணிகள் மாத்திரம் கலந்துகொள்ளும் பட்சத்தில், எழுத்துப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் குழுக்களை இறங்கு வரிசைப்படுத்தி, முதல் இரண்டு இடங்களையும் பெற்ற குழுக்கள் தகுதிச் சுற்று 1 இல் போட்டியிடும். அதில் வெற்றிபெறும் குழு இறுதிப்போட்டிக்கு தகுதி பெறும். தோல்வியடையும் குழு எழுத்துப் பரீட்சையில் மூன்றாம் நிலை பெற்ற குழுவுடன் தகுதிச்சுற்று 2 இல் போட்டியிடும். இதில் வெற்றியடையும் குழு இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும். தோல்வியடையும் குழு மூன்றாம் இடத்தினைப் பெற்றுக்கொள்ளும்.

## 38.3 நேர அமைப்பும் புள்ளித் திட்டமும்

38.3.1 போட்டிகளுக்காகத் தெரிவுசெய்யப்படும் இரு குழுக்களில், முதல் தெரிவு செய்யப்பட்ட குழுவில் விடையளிக்கத் தெரிவு செய்யப்பட்டவரிடம் வினாவப்பட்ட வினாவுக்கு விடையளிப்பதற்குக் கொடுக்கப்படும் நேரம் 15 வினாடிகள் மாத்திரம். புள்ளிகள் 10.

38.3.2 அவர் விடையளிக்காவிடின் அவரது குழுவிலுள்ள ஒருவர் பதிலளிக்கலாம். கொடுக்கப்படும் நேரம் 10 வினாடிகள் மாத்திரம். புள்ளிகள் 05.

38.3.3 இக்குழு பதிலளிக்கத் தவறும் பட்சத்தில் மற்றைய குழுவிற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும். பதிலளிப்பதற்குக் கொடுக்கப்படும் நேரம் 05 வினாடிகள் மாத்திரம். புள்ளிகள் 05.

38.3.4 இரு குழுவினராலும் பதிலளிக்க முடியாவிடின் நடுவர்கள் பதிலைக் கூறிவிட்டுப் போட்டியைத் தொடர்ந்து நடாத்துவர். இவ்விதமாக, இரு குழுக்களுக்கிடையே போட்டிகள் நடக்கும். அதிகப்படியான புள்ளிகள் பெற்ற குழு வெற்றி பெறும்.

38.3.5 ஒரு போட்டி மூன்று சுற்றுக்களைக் கொண்டதாக அமைதல் வேண்டும். மூன்று சுற்றுக்களின் முடிவில் போட்டிக் குழுக்கள் சம புள்ளிகள் பெறுமிடத்து அனைத்து மாணவர்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் **மேலதிக சுற்று** ஒன்று வழங்குதல் வேண்டும். அச் சந்தர்ப்பத்திலும் சமபுள்ளிகள் பெறும் இடத்து இறுதியாக ஒரு **மேலதிக சுற்று** வழங்கப்படவேண்டும். அதிலும் சம புள்ளிகள் பெற்றால், **திருவுளச்சீட்டு** மூலம் வெற்றி தீர்மானிக்கப்படும்.

## 38.4 சுற்றுக்களும் வினாக்களும்

38.4.1 ஒரு போட்டி பின்வரும் மூன்று சுற்றுக்களைக் கொண்டு அமையும்

- முதல் சுற்று – தமிழக இலக்கிய வரலாற்று வினாக்கள்
- இரண்டாம் சுற்று – ஈழத்து இலக்கிய வரலாற்று வினாக்கள்
- மூன்றாம் சுற்று – இலக்கண வினாக்கள்
- **மேலதிக சுற்று (தேவைப்படின்)** - தமிழக இலக்கிய வரலாறு, ஈழத்து இலக்கிய வரலாறு, இலக்கணப் பகுதிகளை உள்ளடக்கிய 10 வினாக்கள்

38.4.2 வினாக்கள் முற்றிலும் தமிழறிவைப் பரீட்சிப்பதாகவே அமைதல் வேண்டும்.

38.4.3 வினாக்கள் வெகுசுட்டிப்பானவையாகவும் தெளிவாகவும் விளக்கம் உடையனவாகவும் இருத்தல் வேண்டும்.

38.4.4 வினாவப்படும் வினாக்கள் **ஒரு சொல்லில் அல்லது சுருக்கமான ஒரு வசனத்தில்** பதில் தரக் கூடியனவாக இருத்தல் வேண்டும். வினாக்கள் இலக்கங்கள் இட்டுத் தயாரிக்கப்பட்டு, அவ்விலக்கங்கள் ஒவ்வொன்றையும் சீட்டில் எழுதிப் போட்டியாளர்களை எடுக்கச்சொல்லி அவ்விலக்கத்திற்குரிய வினா கேட்கப்படல் வேண்டும்.

38.4.5 நடுவர்களால் வினாக்கள் இரண்டு தடவைகள் வாசிக்கப்பட வேண்டும். இரண்டு தடவைகள் வாசித்து முடித்ததன் பின்னரே போட்டியாளர் விடையளிக்கவேண்டும்.

38.4.6 போட்டியாளர், வினா இரண்டு தடவைகளும் வாசிக்கப்பட்ட பின்னர் **ஒரு எத்தனத்தில் விடையளிக்கவேண்டும்.**

**38.4.7 விடைகள் நிராகரிக்கப்படும் சந்தர்ப்பங்கள்**

- பிழையான விடை
- பூரணமற்ற விடை
- தெளிவற்ற விடை
- இரண்டாவது எத்தனத்தில் விடையளித்தல்

## 39.0 போட்டி இலக்கம் : 21 வாசிப்பு முதலாம் பிரிவு தரங்கள் 06, 07

**39.1 விடயம் :**

39.1.1 பாடநூல்கள் தவிர ஏனைய சிறுகதைகள், நாவல்கள் (மர்ம நாவல் தவிர்ந்த), உரைநடைப் பகுதிகள் முதலியவற்றில் இருந்து நடுவர்களால் வழங்கப்படும் உரைநடைப் பகுதி ஒன்றினை வாசித்தல் வேண்டும்.

39.1.2 வழங்கப்படும் உரைநடைப்பகுதி 35-40 வரிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**39.2 நேரம் :** கட்டுப்பாடில்லை.

**39.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 13 ஐப்பார்க்க)

## 40.0 போட்டி இலக்கம் : 22 வாசிப்பு இரண்டாம் பிரிவு தரங்கள் 08, 09

**40.1 விடயம் :**

40.1.1 பாடநூல்கள் தவிர ஏனைய சிறுகதைகள், நாவல்கள் (மர்ம நாவல் தவிர்ந்த), உரைநடைப் பகுதிகள் முதலியவற்றில் இருந்து நடுவர்களால் வழங்கப்படும் உரைநடைப் பகுதி ஒன்றினை வாசித்தல் வேண்டும்.

40.1.2 வழங்கப்படும் உரைநடைப்பகுதி 50 வரிகளுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.

**40.2 நேரம் :** கட்டுப்பாடில்லை.

**40.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 13 ஐப்பார்க்க)

**அட்டவணை 13**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | நிலையும் தொனியும் | 10 |
| ii | நிறுத்தக் குறிகளை அனுசரித்தல் | 10 |
| iii | உச்சரிப்பு | 30 |
| iv | கருத்துப்புலப்பாடு | 25 |
| v | சீரான வேகம் | 15 |
| vi | பொருத்தமான உணர்ச்சி வெளிப்பாடு | 10 |
| **மொத்தம்** | | **100** |

**41.0 போட்டி இலக்கம் : 23 பேச்சு முதலாம் பிரிவு : தரங்கள் 06, 07**

**41.1 விடயம் :**

41.1.1 சுற்றுநிருப இணைப்பில் குறிப்பிடப்படும் 4 தலைப்புகளுள் ஒரு தலைப்பினைப் போட்டி நடைபெறும் இடத்தில் போட்டியாளர் திருவுளச்சீட்டு மூலம் தெரிவுசெய்து பேசுதல் வேண்டும்.

41.1.2 போட்டியாளர் தெரிவுசெய்த தலைப்பிலேயே பேசுதல் வேண்டும். தலைப்பினை மாற்றமுடியாது.

41.1.3 போட்டி நடைபெறும் இடத்திற்கு போட்டியாளர்கள் எவ்வித குறிப்புகளையும் எடுத்துவர முடியாது.

**41.2 தலைப்பு : இணைப்பினைப் பார்க்கவும்**

**41.3 நேரம் :** ஐந்து நிமிடம்

41.3.1 போட்டி நடைபெறும் பொழுது **நேரம் தொடர்பில் எவ்வித சமிக்ஞைகளும்** நடுவர்களால் வழங்கமுடியாது.

**41.4 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 14 ஐப்பார்க்கவும்)

**42.0 போட்டி இலக்கம் : 24 பேச்சு இரண்டாம் பிரிவு : தரங்கள் 08, 09**

**42.1 விடயம் :**

42.1.1 போட்டி நடைபெறும் இடத்தில் வழங்கப்படும் 4 தலைப்புகளுள் ஒரு தலைப்பினைப் போட்டியாளர் திருவுளச்சீட்டு மூலம் தெரிந்தெடுத்து, தயார்செய்து பேசுதல் வேண்டும்.

42.1.2 தலைப்புகள் தமிழ்மொழி வரலாறு, இலக்கியம், இலக்கணம், தமிழ் வளர்த்த சான்றோர்கள், நவீன தொழில்நுட்பமும் தமிழ்மொழியும் மற்றும் சமகாலத்தில் தமிழ்மொழியின் பரம்பல் ஆகிய விடயப்பரப்புக்களிலிருந்து வழங்கப்படும்.

42.1.3 தலைப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் யாருடனும் தொடர்புகொள்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

42.1.4 போட்டி நடைபெறும் இடத்திற்கு போட்டியாளர்கள் எவ்வித குறிப்புகளையும் எடுத்துவர முடியாது

**42.2 நேரம் :** ஒவ்வொரு போட்டியாளருக்கும் தயார் செய்வதற்கு 15 நிமிடங்களும் பேசுவதற்கு 05 நிமிடங்களும் வழங்கப்படும். 04 நிமிட நிறைவில் நடுவர்களால் சமிக்ஞை ஒன்று வழங்கப்படவேண்டும்.

**42.3. புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 14 ஐப்பார்க்கவும்)

**அட்டவணை 14**

| **இல** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | விடய உள்ளடக்கம் | 25 |
| ii | பேச்சு வன்மை | 25 |
| iii | நிலை / மெய்ப்பாடு | 15 |
| iv | அவையீர்ப்பு | 20 |
| v | தொனியும் தெளிவும் | 10 |
| vi | நேரம் | 05 |
| | **மொத்தம்** | **100** |

**43.0 போட்டி இலக்கம் : 25 பேச்சு மூன்றாம் பிரிவு : தரங்கள் 10, 11**

**43.1 விடயம் :**

43.1.1 போட்டி நடைபெறும் இடத்தில் வழங்கப்படும் 4 தலைப்புகளுள் ஒரு தலைப்பினைப் போட்டியாளர் திருவுளச்சீட்டு மூலம் தெரிந்தெடுத்து, தயார்செய்து பேசுதல் வேண்டும்.

43.1.2 தலைப்புகள் தமிழ்மொழி வரலாறு, இலக்கியம், இலக்கணம், தமிழ் வளர்த்த சான்றோர்கள், நவீன தொழில்நுட்பமும் தமிழ்மொழியும் மற்றும் சமகாலத்தில் தமிழ்மொழியின் பரம்பல் ஆகிய விடயப்பரப்புக்களிலிருந்து வழங்கப்படும்.

43.1.3 தலைப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் யாருடனும் தொடர்புகொள்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

43.1.4 போட்டி நடைபெறும் இடத்திற்கு போட்டியாளர்கள் எவ்வித குறிப்புகளையும் எடுத்துவர முடியாது

**43.2 நேரம் :** ஒவ்வொரு போட்டியாளர்க்கும் தயார் செய்வதற்கு 15 நிமிடங்களும், பேசுவதற்கு 05 நிமிடங்களும் வழங்கப்படும். 04 நிமிட நிறைவில் நடுவர்களால் சமிக்ஞை ஒன்று வழங்கப்படவேண்டும்.

**43.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 15 ஐப்பார்க்கவும்)

## 44.0 போட்டி இலக்கம் : 26 பேச்சு நான்காம் பிரிவு : தரங்கள் 12, 13

**44.1 விடயம் :**

44.1.1 போட்டி நடைபெறும் இடத்தில் வழங்கப்படும் 4 தலைப்புகளுள் ஒரு தலைப்பினைப் போட்டியாளர் திருவுளச்சீட்டு மூலம் தெரிந்தெடுத்து, தயார்செய்து பேசுதல் வேண்டும்.

44.1.2 தலைப்புகள் தமிழ்மொழி வரலாறு, இலக்கியம், இலக்கணம், தமிழ் வளர்த்த சான்றோர்கள், நவீன தொழில்நுட்பமும் தமிழ்மொழியும் மற்றும் சமகாலத்தில் தமிழ்மொழியின் பரம்பல் ஆகிய விடயப்பரப்புக்களிலிருந்து வழங்கப்படும்.

44.1.3 தலைப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் யாருடனும் தொடர்புகொள்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

44.1.4 போட்டி நடைபெறும் இடத்திற்கு போட்டியாளர்கள் எவ்வித குறிப்புகளையும் எடுத்துவர முடியாது

**44.2 நேரம் :** ஒவ்வொரு போட்டியாளர்க்கும் தயார்செய்வதற்கு 15 நிமிடங்களும், பேசுவதற்கு 05 நிமிடங்களும் வழங்கப்படும். 04 நிமிட நிறைவில் நடுவர்களால் சமிக்ஞை ஒன்று வழங்கப்படவேண்டும்.

**44.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 15 ஐப்பார்க்கவும்)

**அட்டவணை 15**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | பொருட்புலப்பாடு | 20 |
| ii | தொனியும் தெளிவும் | 20 |
| iii | நிலை / மெய்ப்பாடு | 15 |
| iv | அவையீர்ப்பு | 20 |
| v | பேச்சு வன்மை | 20 |
| vi | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 45.0 போட்டி இலக்கம் : 27 பாவோதல் முதலாம் பிரிவு : தரங்கள் 06, 07

**45.1 விடயம் : இணைப்பினைப் பார்க்கவும்**

**45.1.1 திருக்குறள் : இணைப்பில்** இரண்டு அதிகாரங்கள் தரப்படும். ஒவ்வொரு அதிகாரத்திலிருந்தும் தலா இரண்டு குறள்கள் வீதம் **நான்கு** குறள்களை திருவுளச்சீட்டு மூலம் போட்டியாளர் தேர்ந்தெடுத்து ஓதுதல் வேண்டும்.

**45.1.2. தெரிவுப்பாடல்கள் : இணைப்பில்** தரப்பட்ட இரண்டு பாடல்களுள் ஒன்றினைப் போட்டியாளர் திருவுளச்சீட்டு மூலம் தேர்ந்தெடுத்து ஓதுதல் வேண்டும்.

**45.2 நேரம் : கட்டுப்பாடில்லை**

**45.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 16 ஐப்பார்க்கவும்)

## 46.0 போட்டி இலக்கம் : 28 பாவோதல் இரண்டாம் பிரிவு : தரங்கள் 08, 09

**46.1 விடயம் : இணைப்பினைப் பார்க்கவும்**

**46.1.1 திருக்குறள் : இணைப்பில்** இரண்டு அதிகாரங்கள் தரப்படும். ஒவ்வொரு அதிகாரத்திலிருந்தும் தலா இரண்டு குறள்கள் வீதம் **நான்கு** குறள்களை திருவுளச்சீட்டு மூலம் போட்டியாளர் தேர்ந்தெடுத்து ஓதுதல் வேண்டும்.

**46.1.2. தெரிவுப்பாடல்கள் : இணைப்பில்** தரப்பட்ட மூன்று பாடல்களுள் இரண்டினைப் போட்டியாளர் திருவுளச்சீட்டு மூலம் தேர்ந்தெடுத்து ஓதுதல் வேண்டும்.

**46.2 நேரம் : கட்டுப்பாடில்லை**

**46.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 16 ஐப்பார்க்கவும்)

**அட்டவைண 16**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | மனனத்திறன் | 25 |
| ii | பொருள் விளங்க ஓதுதல் | 20 |
| iii | ஓசையும் உணர்ச்சியும் | 20 |
| iv | தெளிவும் விளக்கமும் | 25 |
| v | நிலை / மெய்ப்பாடு | 10 |
| **மொத்தம்** | | **100** |

**46.4 பாவோதலுக்கான பொது விதிகள் :**

46.4.1 முதலில் பாடலைச் சொல்ல வேண்டும்.

46.4.2 அடுத்து சந்தி பிரித்துச் சொல்ல வேண்டும்.

46.4.3 அதன் பின் பொருளைக் கூறல் வேண்டும்.

46.4.4 நிறைவாக குறளை/பாடலை ஓதுதல் வேண்டும்.

46.4.5 செய்யுள்களை ஓசையும் உணர்ச்சியும் வெளிப்படக்கூடிய முறையில் தெளிவாக ஓதுதல் வேண்டும்.

46.4.6 இராகம் தேவையில்லை.

46.4.7 போட்டியாளர்கள் பாடசாலை சீருடையுடன் மாத்திரமே பாவோதல் போட்டியில் பங்குகொள்ளல் வேண்டும்.

## 47.0 போட்டி இலக்கம் : 29 இலக்கிய விமர்சனம் மூன்றாம் பிரிவு : தரங்கள் 10, 11

**47.1 விடயம் : இணைப்பினைப் பார்க்கவும்**

47.1.1 இணைப்பில் தரப்பட்டுள்ள இரண்டு பாடல்களையும் விமர்சனம் செய்தல் வேண்டும்.

47.1.2 போட்டியாளர் அமர்ந்திருந்தவாறு விமர்சனத்தை முன்வைத்தல் வேண்டும்.

47.1.3 போட்டியாளர் பாடசாலைச் சீருடையுடனேயே பங்குபற்றவேண்டும்.

**47.2 நேரம்:** பதினைந்து நிமிடங்கள்

**47.3 புள்ளித்திட்டம் :-** 100 புள்ளிகள் (அட்டவணை 17 ஐப்பார்க்கவும்)

## 48.0 போட்டி இலக்கம் : 30 இலக்கிய விமர்சனம் நான்காம் பிரிவு : தரங்கள் 12,13

**48.1 விடயம் : இணைப்பினைப் பார்க்கவும்**

48.1.1 இணைப்பில் தரப்பட்டுள்ள இரண்டு பாடல்களையும் விமர்சனம் செய்தல் வேண்டும்.

48.1.2 போட்டியாளர் அமர்ந்திருந்தவாறு விமர்சனத்தை முன்வைத்தல் வேண்டும்.

48.1.3 போட்டியாளர் பாடசாலைச் சீருடையுடனேயே பங்குபற்றவேண்டும்.

**48.2 நேரம்:** பதினைந்து நிமிடங்கள்

**48.3 புள்ளித்திட்டம் :-** 100 புள்ளிகள் (அட்டவணை 17 ஐப்பார்க்கவும்)

**அட்டவைண 17**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | பொருளமைவு | 10 |
| ii | விமர்சிக்கும் திறன் | 30 |
| iii | மொழியாளுமை | 30 |
| iv | உச்சரிப்பு | 20 |
| v | நிலை | 05 |
| vi | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 49.0 போட்டி இலக்கம் : 31 அறிவிப்பாளர் மூன்றாம் பிரிவு தரங்கள் : 10, 11

### 49.1 விடயம்

49.1.1 போட்டி நடைபெறும் இடத்தில் போட்டியாளர்களுக்குச் சில களப் பின்னணிகள் வழங்கப்படும். போட்டியாளர்கள் திருவுளச்சீட்டு மூலம் ஒரு களப் பின்னணியைத் தெரிவு செய்து அறிவிப்புச் செய்தல் வேண்டும்.

49.1.2 வழங்கப்பட்ட களப் பின்னணி தொடர்பான ஆழமான சிந்தனை, அதனை வெளிப்படுத்தும் விதம், சரளமான பேச்சுத் திறன், மொழி ஆளுமை, உச்சரிப்புத் தெளிவு, சமயோசித உத்தி என்பன இதன்போது கவனிக்கப்படும்.

**49.2 நேரம்:** தயார்படுத்தலுக்காக 15 நிமிடங்கள் வழங்கப்படும். அறிவிப்புச் செய்வதற்கான நேரம் 5 நிமிடங்கள்

### 49.3 பொதுவான விதிகள்:

49.3.1 வானொலி, தொலைக்காட்சி, பொது மேடை நிகழ்ச்சிகள் போன்ற அட்டவணை 18 இல் குறிப்பிடப்பட்ட பல்துறைசார் அறிவிப்புப் பாணிகள் இடம்பெறல் வேண்டும்.

49.3.2 போட்டியின் போது போட்டியாளர்கள் ஒலி வாங்கியைப் பயன்படுத்தியே அறிவிப்புச் செய்தல் வேண்டும். இது மாகாண, தேசிய மட்டங்களிற்கு கட்டாயமானது. ஒலி வாங்கி வசதிகளை போட்டி ஏற்பாட்டாளர்களே ஒழுங்கமைத்துக் கொடுத்தல் வேண்டும்.

49.3.3 போட்டியாளர் பாடசாலைச் சீருடையுடனேயே போட்டியில் பங்குபற்றல் வேண்டும். (கழுத்துப்பட்டி மற்றும் பாடசாலை அடையாளங்கள் தவிர்த்தல் வேண்டும்)

**49.4 புள்ளித்திட்டம் :-** 100 புள்ளிகள் (அட்டவைண 19 ஐப்பார்க்கவும்)

## 50.0 போட்டி இலக்கம் : 32 அறிவிப்பாளர் நான்காம் பிரிவு தரங்கள் : 12, 13

### 50.1 விடயம்

50.1.1 போட்டி நடைபெறும் இடத்தில் போட்டியாளர்களுக்குச் சில களப் பின்னணிகள் வழங்கப்படும். போட்டியாளர்கள் திருவுளச்சீட்டு மூலம் ஒரு களப் பின்னணியைத் தெரிவு செய்து அறிவிப்புச் செய்தல் வேண்டும்.

50.1.2 வழங்கப்பட்ட களப் பின்னணி தொடர்பான ஆழமான சிந்தனை, அதனை வெளிப்படுத்தும் விதம், சரளமான பேச்சுத் திறன், மொழி ஆளுமை, உச்சரிப்புத் தெளிவு, சமயோசித உத்தி என்பன இதன்போது கவனிக்கப்படும்.

**50.2 நேரம்:** தயார்படுத்தலுக்காக 15 நிமிடங்கள் வழங்கப்படும். அறிவிப்புச் செய்வதற்கான நேரம் 5 நிமிடங்கள்

### 50.3 பொதுவான விதிகள்:

50.3.1 வானொலி, தொலைக்காட்சி, பொது மேடை நிகழ்ச்சிகள் போன்ற அட்டவணை 18 இல் குறிப்பிடப்பட்ட பல்துறைசார் அறிவிப்புப்பாணிகள் இடம்பெறல் வேண்டும்.

50.3.2 போட்டியின் போது போட்டியாளர்கள் ஒலி வாங்கியைப் பயன்படுத்தியே அறிவிப்புச் செய்தல் வேண்டும். இது மாகாண, தேசிய மட்டங்களிற்கு கட்டாயமானது. ஒலி வாங்கி வசதிகளை போட்டி ஏற்பாட்டாளர்களே ஒழுங்கமைத்துக் கொடுத்தல் வேண்டும்.

50.3.3 போட்டியாளர் பாடசாலைச் சீருடையுடனேயே போட்டியில் பங்குபற்றல் வேண்டும். (கழுத்துப்பட்டி மற்றும் பாடசாலை அடையாளங்கள் தவிர்த்தல் வேண்டும்)

**அட்டவணை 18**

| ஊடகம் | விடயம் | நிலை |
|---|---|---|
| வானொலி | செய்தி வாசிப்பு | அமர்ந்த நிலை |
| | நிகழ்ச்சித் தொகுப்பு | அமர்ந்த நிலை |
| | விளம்பரம் | அமர்ந்த நிலை |
| தொலைக்காட்சி | செய்தி வாசிப்பு | அமர்ந்த நிலை |
| | நிகழ்ச்சித் தொகுப்பு | நின்ற அல்லது அமர்ந்த நிலை |
| | விளம்பரம் | நின்ற அல்லது அமர்ந்த நிலை |
| | நேர்முக வர்ணனை | நின்ற அல்லது அமர்ந்த நிலை |
| பொது மேடைகள் | நிகழ்ச்சித் தொகுப்பு | நின்ற நிலை |
| பொது இடங்கள் | நேர்முக வர்ணனை | நின்ற நிலை |
| | நேரடி ஒளிபரப்பு | நின்ற நிலை |

**50.4 புள்ளித்திட்டம் :-** 100 புள்ளிகள் (அட்டவணை 19 ஐப்பார்க்கவும்)

**அட்டவணை 19**

| **இல** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | மொழிவளம் | 20 |
| ii | உச்சரிப்புத் தெளிவு | 25 |
| iii | குரல் வளம், தொனி | 10 |
| iv | சமயோசித உத்தி | 30 |
| v | உணர்ச்சி வெளிப்பாடு | 10 |
| vi | நேரம் | 05 |
| | **மொத்தம்** | **100** |

**51.0 போட்டி இலக்கம் : 33 இசை - தனி முதலாம் பிரிவு : தரங்கள் 06, 07**

**51.1 விடயம்:- இணைப்பினைப் பார்க்கவும்.**

51.1.1 கோட்ட/வலய மட்டத்திலே தெரிவுசெய்யும் பாடலையே தேசிய மட்டம் வரை பாடுதல் வேண்டும்.

51.1.2 கோட்ட, வலய, மாகாண, தேசிய மட்டப் போட்டிகளின் போது போட்டியாளரால் பாடப்படுகின்ற பாடலின் எழுத்து வடிவம் பாடசாலை அதிபராலும், சங்கீத ஆசிரியராலும் உறுதிப்படுத்தப்பட்டு போட்டி ஏற்பாட்டுக் குழுவிடம் வழங்கப்படுவது அவசியம்.

**51.2 நேரம்: 04 - 05 நிமிடங்கள்**

**51.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 20 ஐப்பார்க்கவும்)

**52.0 போட்டி இலக்கம் : 34 இசை – தனி இரண்டாம் பிரிவு : தரங்கள் 08, 09**

**52.1 விடயம்: இணைப்பினைப் பார்க்கவும்**

52.1.1 கோட்ட/வலய மட்டத்திலே தெரிவுசெய்யும் பாடலையே தேசிய மட்டம் வரை பாடுதல் வேண்டும்.

52.1.2 கோட்ட, வலய, மாகாண, தேசிய மட்டப் போட்டிகளின் போது போட்டியாளரால் பாடப்படுகின்ற பாடலின் எழுத்து வடிவம் பாடசாலை அதிபராலும், சங்கீத ஆசிரியராலும் உறுதிப்படுத்தப்பட்டு, போட்டி ஏற்பாட்டுக் குழுவிடம் வழங்கப்படுவது அவசியம்.

**52.2 நேரம்: 05 - 06 நிமிடங்கள்**

**52.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 20 ஐப்பார்க்கவும்)

**53.0 போட்டி இலக்கம் : 35 இசை – தனி மூன்றாம் பிரிவு : தரங்கள் 10, 11**

**53.1 விடயம்: இணைப்பினைப் பார்க்கவும்**

53.1.1 கோட்டமட்டத்திலே தெரிவுசெய்கின்ற பாடலையே தேசிய மட்டம் வரை பாடுதல் வேண்டும்.

53.1.2 கோட்ட, வலய, மாகாண, தேசிய மட்டப் போட்டிகளின் போது போட்டியாளரால் பாடப்படுகின்ற பாடலின் எழுத்து வடிவம் பாடசாலை அதிபராலும், சங்கீத ஆசிரியராலும் உறுதிப்படுத்தப்பட்டு, போட்டி ஏற்பாட்டுக் குழுவிடம் வழங்கப்படுவது அவசியம்.

**53.2 நேரம்: 06 - 08 நிமிடங்கள்**

**53.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 20 ஐப்பார்க்கவும்)

**அட்டவணை 20**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | பாடுந்திறன் | 20 |
| ii | சுருதி | 20 |
| iii | லயம் | 20 |
| iv | பாவம் | 15 |
| v | உச்சரிப்புத் தெளிவு | 10 |
| vi | நிலை - சமர்ப்பணம் | 10 |
| vii | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

**54.0 போட்டி இலக்கம் : 36 இசை - தனி நான்காம் பிரிவு : தரங்கள் 12, 13**

**54.1 விடயம்: இணைப்பினைப் பார்க்கவும்**

54.1.1 கோட்ட/வலய மட்டத்திலே தெரிவுசெய்யும் பாடலையே தேசிய மட்டம் வரை பாடுதல் வேண்டும்.

54.1.2 கோட்ட, வலய, மாகாண, தேசிய மட்டப் போட்டிகளின் போது போட்டியாளரால் பாடப்படுகின்ற பாடலின் எழுத்து வடிவம் பாடசாலை அதிபராலும், சங்கீத ஆசிரியராலும் உறுதிப்படுத்தப்பட்டு, போட்டி ஏற்பாட்டுக் குழுவிடம் வழங்கப்படுவது அவசியம்.

**54.2 நேரம்: 12 - 15 நிமிடங்கள்**

**54.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 21 ஐப்பார்க்கவும்)

**அட்டவணை 21**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | இராக ஆலாபனை | 15 |
| ii | சுருதி | 15 |
| iii | நிரவல் | 10 |
| iv | கற்பனாஸ்வரம் | 10 |
| v | பாடுந்திறன் | 10 |
| vi | லயம் | 10 |
| vii | பாவம் | 10 |
| viii | உச்சரிப்புத் தெளிவு | 10 |
| ix | நிலை | 05 |
| x | நேரம் | 05 |
| | **மொத்தம்** | **100** |

**55.0 போட்டி இலக்கம் : 37 இசை குழு 1 பிரிவு : தரங்கள் 06, 07, 08, 09**

**55.1 விடயம்: இணைப்பினைப் பார்க்கவும்**

55.1.1 கோட்டமட்டத்திலே தெரிவுசெய்கின்ற பாடலையே தேசிய மட்டம் வரை பாடுதல் வேண்டும்.

55.1.2 கோட்ட, வலய, மாகாண, தேசிய மட்டப் போட்டிகளின் போது போட்டியாளரால் பாடப்படுகின்ற பாடலின் எழுத்து வடிவம் பாடசாலை அதிபராலும், சங்கீத ஆசிரியராலும் உறுதிப்படுத்தப்பட்டு, போட்டி ஏற்பாட்டுக் குழுவிடம் வழங்கப்படுவது அவசியம்.

**55.2 நேரம்: 06 - 08 நிமிடங்கள்**

**55.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவைண 22 ஐப்பார்க்கவும்)

**அட்டவணை 22**

| **இல** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | பாடுந்திறன் | 20 |
| ii | சுருதி | 15 |
| iii | லயம் | 15 |
| iv | பாவம் | 15 |
| v | ஒத்திசைவு | 15 |
| vi | உச்சரிப்புத் தெளிவு | 10 |
| vii | நிலை - சமர்ப்பணம் | 05 |
| viii | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

**56.0 போட்டி இலக்கம் : 38 இசை குழு 2 பிரிவு : தரங்கள் 10, 11, 12, 13**

**56.1 விடயம்: இணைப்பினைப் பார்க்கவும்**

56.1.1 கோட்ட/வலய மட்டத்திலே தெரிவுசெய்யும் பாடலையே தேசிய மட்டம் வரை பாடுதல் வேண்டும்.

56.1.2 கோட்ட, வலய, மாகாண, தேசிய மட்டப் போட்டிகளின் போது போட்டியாளரால் பாடப்படுகின்ற பாடலின் எழுத்து வடிவம் பாடசாலை அதிபராலும், சங்கீத ஆசிரியராலும் உறுதிப்படுத்தப்பட்டு, போட்டி ஏற்பாட்டுக் குழுவிடம் வழங்கப்படுவது அவசியம்.

**56.2 நேரம்: 10 - 12 நிமிடங்கள்**

**56.3 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 23 ஐப்பார்க்கவும்)

**அட்டவணை 23**

| **இல** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | பாடுந்திறன் | 20 |
| ii | சுருதி | 15 |
| iii | லயம் | 15 |
| iv | பாவம் | 15 |
| v | ஒத்திசைவு | 15 |
| vi | உச்சரிப்புத் தெளிவு | 10 |
| vii | நிலை - சமர்ப்பணம் | 05 |
| viii | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

**57.0 போட்டி இலக்கம் : 39 நடனம் - தனி முதலாம் பிரிவு : தரங்கள் 06, 07**

**57.1 விடயம் : இணைப்பினைப் பார்க்கவும்**

57.1.1 நட்டுவாங்கம் செய்பவர் அதே பாடசாலையில் கற்பிப்பவராகவும் இத்துறையில் வாண்மை வாய்ந்த ஓர் ஆசிரியராகவும் இருத்தல் வேண்டும்.

57.1.2 நட்டுவாங்கத் தாளமும் நடனத்திற்குரிய பக்கப் பாட்டும், சுருதி இசைப்பதற்குமாக மூவர் போதுமானது. பக்கவாத்தியங்கள் தவிர்க்கப்படல் வேண்டும்.

57.1.3 அதே பாடசாலைச் சங்கீத ஆசிரியரால் அல்லது அதே பாடசாலை மாணவராலேயே பக்கப்பாடல் இசைக்கப்பட வேண்டும்.

57.1.4 நடன/சங்கீத ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகள், வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் வேறொரு அரச பாடசாலையில் இருந்து நடன/சங்கீத ஆசிரியர்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். (வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதிக் கடிதம் சகல மட்டப் போட்டிகளின் போதும் முன்வைக்கப்படவேண்டும்)

**57.2 நேரம் : 05 - 06 நிமிடங்கள்**

### 57.3 பொதுவான விதிகள்

57.3.1 அபிநயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். பிரிவின் தரங்களுக்கேற்ப பரத நடன அடவுகள் பிரயோகிக்க வேண்டும்.

57.3.2 ஜதிகள், ஸ்வரக் கோவைகள் தவிர்க்கப்படல் வேண்டும். நட்டுவாங்கத் தாளமும் பின்னணி இசையும் போதுமானவை. அணிசேர் இசைக்கருவிகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

57.3.3 உடை - பெண் பிள்ளைகளாயின் பாவாடை சட்டையும் ஆண் பிள்ளைகளாயின் பைஜாமாவும் குர்த்தாவும் அணியலாம் நடனம் ஆடுவதற்கு ஏற்றாற் போல் இருத்தல் வேண்டும்.

57.3.4 பரதநாட்டிய சாஸ்திரிய (costume) ஆடை பயன்படுத்தமுடியாது. **ஆடை அலங்காரத்திற்கு புள்ளிகள் வழங்கபடமாட்டாது.**

57.3.5 அணிகலன் - பெண் பிள்ளைகளாயின் உச்சிப்பட்டம், ஜிமிக்கி தோடு, காதுமாட்டல், அட்டியல், காப்பு, தலைக்கு பூ மாலை போதுமானவை.

57.3.6 ஒப்பனை - நடனத்திற்குப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்.

### 57.4 புள்ளித்திட்டம் : 100 புள்ளிகள் (அட்டவணை 24 ஐப்பார்க்கவும்)

**அட்டவணை 24**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | ஆக்கம் | 10 |
| ii | தாளம், லயம் | 20 |
| iii | பாவம் | 20 |
| iv | அங்கசுத்தம் | 20 |
| v | இயல்பான ஆடல்முறை | 15 |
| vi | சமர்ப்பணம் | 10 |
| vii | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 58.0 போட்டி இலக்கம் : 40 நடனம் - தனி இரண்டாம் பிரிவு : தரங்கள் 08, 09

### 58.1 விடயம் : இணைப்பினைப்பார்க்கவும்

58.1.1 நட்டுவாங்கம் செய்பவர் அதே பாடசாலையில் கற்பிப்பவராகவும் இத்துறையில் வாண்மை வாய்ந்த ஓர் ஆசிரியராகவும் இருத்தல் வேண்டும்.

58.1.2 நட்டுவாங்கத் தாளமும் நடனத்திற்குரிய பக்கப் பாட்டும், சுருதி இசைப்பதற்குமாக மூவர் போதுமானது. பக்கவாத்தியங்கள் தவிர்க்கப்படல் வேண்டும்.

58.1.3 அதே பாடசாலைச் சங்கீத ஆசிரியரால் அல்லது அதே பாடசாலை மாணவராலேயே பக்கப்பாடல் இசைக்கப்பட வேண்டும்.

58.1.4 நடன/சங்கீத ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகள், வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் வேறொரு அரச பாடசாலையில் இருந்து நடன/சங்கீத ஆசிரியர்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். (வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதிக் கடிதம் சகல மட்டப் போட்டிகளின் போதும் முன்வைக்கப்படவேண்டும்)

### 58.2 நேரம் : 06 - 08 நிமிடங்கள்

### 58.3 பொதுவான விதிகள்

58.3.1 அபிநயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். பிரிவின் தரங்களுக்கேற்ப பரத நடன அடவுகள் பிரயோகிக்கவேண்டும்.

58.3.2 ஜதிகள், ஸ்வரக் கோவைகள் தவிர்க்கப்படல் வேண்டும். நட்டுவாங்கத் தாளமும் பின்னணி இசையும் போதுமானவை. அணிசேர் இசைக்கருவிகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

58.3.3 உடை - பெண் பிள்ளைகளாயின் பாவாடை சட்டையும் ஆண் பிள்ளைகளாயின் பைஜாமாவும் குர்த்தாவும் அணியலாம். நடனம் ஆடுவதற்கு ஏற்றாற் போல் இருத்தல் வேண்டும்.

58.3.4 பரதநாட்டிய சாஸ்திரிய (costume) ஆடை பயன்படுத்தமுடியாது. **ஆடை அலங்காரத்திற்கு புள்ளிகள் வழங்கபடமாட்டாது.**

58.3.5 அணிகலன் - பெண்பிள்ளைகளாயின் உச்சிப்பட்டம், ஜிமிக்கி தோடு, காதுமாட்டல், அட்டியல், காப்பு, தலைக்கு பூ மாலை போதுமானவை.

58.3.6 ஒப்பனை - நடனத்திற்குப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்.

**58.4 புள்ளித்திட்டம்:** 100 புள்ளிகள் (அட்டவணை 25 ஐப்பார்க்கவும்)

**அட்டவணை 25**

| **இல** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | தாளம், லயம் | 20 |
| ii | பாவம் | 10 |
| iii | அங்கசுத்தம் | 20 |
| iv | இயல்பான ஆடல்முறை | 20 |
| v | உருப்படியின் அமைப்புமுறை | 15 |
| vi | சமர்ப்பணம் | 10 |
| vii | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 59.0 போட்டி இலக்கம் : 41 நடனம் - தனி மூன்றாம் பிரிவு : தரங்கள் 10, 11

### 59.1 விடயம் : இணைப்பினைப்பார்க்கவும்

59.1.1 நட்டுவாங்கம் செய்பவர் அதே பாடசாலையில் கற்பிப்பவராகவும் இத்துறையில் வாண்மை வாய்ந்த ஓர் ஆசிரியராகவும் இருத்தல் வேண்டும்.

59.1.2 நட்டுவாங்கத் தாளமும் நடனத்திற்குரிய பக்கப் பாட்டும், சுருதி இசைப்பதற்குமாக மூவர் போதுமானது. பக்கவாத்தியங்கள் தவிர்க்கப்படல் வேண்டும்.

59.1.3 அதே பாடசாலைச் சங்கீத ஆசிரியரால் அல்லது அதே பாடசாலை மாணவராலேயே பக்கப்பாடல் இசைக்கப்பட வேண்டும்.

59.1.4 நடன/சங்கீத ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகள், வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் வேறொரு அரச பாடசாலையில் இருந்து நடன/சங்கீத ஆசிரியர்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். (வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதிக் கடிதம் சகல மட்டப் போட்டிகளின் போதும் முன்வைக்கப்படவேண்டும்)

### 59.2 நேரம் : 06 - 08 நிமிடங்கள்

### 59.3 பொதுவான விதிகள்

59.3.1 அபிநயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். பிரிவின் தரங்களுக்கேற்ப பரத நடன அடவுகள் பிரயோகிக்கவேண்டும்.

59.3.2 ஜதிகள், ஸ்வரக் கோவைகள் தவிர்க்கப்படல் வேண்டும். நட்டுவாங்கத் தாளமும் பின்னணி இசையும் போதுமானவை. அணிசேர் இசைக்கருவிகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

59.3.3 உடை - பெண் பிள்ளைகளாயின் பரதநாட்டியப் பயிற்சி உடை. ஆண் பிள்ளைகளாயின் தார்பாய்ச்சியும் குர்த்தாவும் அணியலாம் நடனம் ஆடுவதற்கு ஏற்றாற் போல் இருத்தல் வேண்டும்.

59.3.4 பரதநாட்டிய சாஸ்திரிய (costume) ஆடை பயன்படுத்தமுடியாது. **ஆடை அலங்காரத்திற்கு புள்ளிகள் வழங்கபடமாட்டாது.**

59.3.5 அணிகலன் - பெண்பிள்ளைகளாயின் உச்சிப்பட்டம், ஜிமிக்கி தோடு, காதுமாட்டல், அட்டியல், காப்பு, தலைக்கு பூ மாலை போதுமானவை.

59.3.6 ஒப்பனை - நடனத்திற்குப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்.

**59.4 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 26 ஐப்பார்க்கவும்)

**அட்டவணை 26**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | ஆக்கம் | 15 |
| ii | தாளம், லயம் | 20 |
| iii | பாவம் | 20 |
| iv | அங்கசுத்தம் | 15 |
| v | இயல்பான ஆடல்முறை | 15 |
| vi | சமர்ப்பணம் | 10 |
| vii | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 60.0 போட்டி இலக்கம் : 42 நடனம் - தனி நான்காம் பிரிவு : தரங்கள் 12, 13

### 60.1 விடயம் :

60.1.1 போட்டி நடைபெறும் இடத்தில் வழங்கப்படும் தலைப்பை மையமாகக் கொண்டு நடனத்தை ஆக்கம் செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

60.1.2 புராண, இதிகாசக் கதைகளிலிருந்து ஒரு சம்பவம் நடுவர்களால் வழங்கப்படும்.

60.1.3 நட்டுவாங்கம் செய்பவர் அதே பாடசாலையில் கற்பிப்பவராகவும் இத்துறையில் வாண்மை வாய்ந்த ஓர் ஆசிரியராகவும் இருத்தல் வேண்டும்.

60.1.4 நட்டுவாங்கத்தாளமும், பக்கவாத்தியமும் கட்டாயம் இடம்பெறல் வேண்டும். புல்லாங்குழல் அல்லது வயலின் மற்றும் மிருதங்கம் பயன்படுத்த முடியும். இவை பாடசாலை ஆசிரியரால் அல்லது மாணவராலேயே இசைக்கப்படவேண்டும்.

60.1.5 நடன/சங்கீத ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகள், வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் வேறொரு அரச பாடசாலையில் இருந்து நடன/சங்கீத ஆசிரியர்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். (வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதிக் கடிதம் சகல மட்டப் போட்டிகளின் போதும் முன்வைக்கப்படவேண்டும்)

**60.2 நேரம் :** முன்னாயத்தம் செய்வதற்கு 15 நிமிடங்கள் வழங்கப்படும். அபிநயத்தல் 05 – 07 நிமிடங்கள். (5 நிமிட நிறைவில் நடுவர்களால் சமிக்ஞை ஒன்று வழங்கப்படலாம்)

### 60.3 பொதுவான விதிகள்

60.3.1 அபிநயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். பிரிவின் தரங்களுக்கேற்ப பரத நடன அடவுகள் பிரயோகிக்கவேண்டும்.

60.3.2 உடை - பெண் பிள்ளைகளாயின் பரதநாட்டியப் பயிற்சி உடை. ஆண் பிள்ளைகளாயின் தார்பாய்ச்சியும் குர்த்தாவும் அணியலாம். நடனம் ஆடுவதற்கு ஏற்றாற் போல் இருத்தல் வேண்டும்.

60.3.3 பரதநாட்டிய கொஸ்டிம் (costume) ஆடை பயன்படுத்தமுடியாது. **ஆடை அலங்காரத்திற்கு புள்ளிகள் வழங்கபடமாட்டாது.**

60.3.4 அணிகலன் - பெண்பிள்ளைகளாயின் உச்சிப்பட்டம், ஜிமிக்கி தோடு, காதுமாட்டல், அட்டியல், காப்பு, தலைக்கு பூ மாலை போதுமானவை.

60.3.5 ஒப்பனை- நடனத்திற்குப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்.

**60.4 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 27 ஐப் பார்க்கவும்)

அட்டவணை 27

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | ஆக்கமும் நடன அமைப்பும் | 25 |
| ii | பாவம் | 20 |
| iii | தாளம், லயம் | 20 |
| iv | அங்கசுத்தம் | 20 |
| v | சமர்ப்பணம் | 10 |
| vi | நேரம் | 05 |
| மொத்தம் | | 100 |

**61.0 போட்டி இலக்கம் : 43 நடனம் குழு 1 பிரிவு : தரங்கள் 06, 07, 08, 09**

**61.1 விடயம் : இணைப்பினைப்பார்க்கவும்**

60.1.1 நடனத்திற்கான பாடல்கள் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும்.

**61.2 நேரம்: 06 - 07 நிமிடங்கள்**

**61.3 சிறப்பு விதிகள் :**

61.3.1 மேலே குறிப்பிட்ட நடனத்திற்கு கிராமியப்பாங்கு பேணப்பட வேண்டும். சாஸ்திரிய முறையில் அமைந்த பரத அடவுகளோ, கதகளிச் சுவடுகளோ இடம்பெறுதல் தவிர்க்கப்படல் வேண்டும். அந்தந்த நடனத்தின் தன்மைக்கேற்ப நடன அமைப்பு இடம்பெறுதல் வேண்டும்

61.3.2 கிராமிய நடனத்திற்கு பக்கவாத்தியங்கள் கட்டாயமாகப் பயன்படுத்தல் வேண்டும். டொல்கி, புல்லாங்குழல், ஹார்மோனியம், வயலின் என்பவற்றுள் பொருத்தமான இரண்டு வாத்தியங்கள்

61.3.3 ஆசிரியரின் நட்டுவாங்கத்துடன் பாடகர் இருவர், வாத்தியகாரர் இருவர் உட்பட மொத்தமாக ஐந்து பேரிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

61.3.4 நட்டுவாங்கம் செய்பவர் அதே பாடசாலையில் கற்பிப்பவராகவும் இத்துறையில் வாண்மை வாய்ந்த ஓர் ஆசிரியராகவும் இருத்தல் வேண்டும்.

61.3.5 பக்கப் பாட்டு, பக்கவாத்தியம் இசைப்பவர்கள் பாடசாலை ஆசிரியர் அல்லது மாணவர்களாக இருத்தல் வேண்டும்.

61.3.6 உடை, அணிகலன்கள் நடனத்திற்குப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்.

61.3.7 நடன/சங்கீத ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகள், வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் வேறொரு அரச பாடசாலையில் இருந்து நடன/சங்கீத ஆசிரியர்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். (வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதிக் கடிதம் சகல மட்டப் போட்டிகளின் போதும் முன்வைக்கப்படவேண்டும்)

**61.4 புள்ளித்திட்டம்:** 100 புள்ளிகள் (அட்டவணை 28 ஐப்பார்க்கவும்)

அட்டவணை 28

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | ஆக்கம் | 20 |
| ii | தாளம், லயம் | 25 |
| iii | இயல்பான ஆடல்முறை | 15 |
| iv | ஒத்திசைவு | 15 |
| v | அங்கசுத்தம் | 10 |
| vi | சமர்ப்பணம் | 10 |
| vii | நேரம் | 05 |
| மொத்தம் | | 100 |

**62.0 போட்டி இலக்கம் : 44 நாட்டிய நாடகம் (ஆடற்கதை) பிரிவு : திறந்த போட்டி**

**62.1 விடயம் : இணைப்பினைப் பார்க்கவும்**

62.1.1 நாட்டிய நாடகம் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும்.

62.1.2 நட்டுவாங்கம் செய்பவர் அதே பாடசாலையில் கற்பிப்பவராகவும் இத்துறையில் வாண்மை வாய்ந்த ஓர் ஆசிரியராகவும் இருத்தல் வேண்டும்.

62.1.3 நட்டுவாங்கத்தாளமும், பக்கப் பாட்டும் பக்கவாத்தியமும் கட்டாயம் இடம்பெறல் வேண்டும்.

62.1.4 பக்கவாத்தியங்களாக மிருதங்கம், வயலின், ஓர்கன் பயன்படுத்த முடியும். இவை பாடசாலை ஆசிரியரால் அல்லது மாணவராலேயே இசைக்கப்படவேண்டும்.

62.1.5 நட்டுவாங்கம் ஒருவர், பக்கப்பாட்டு இருவர், பக்கவாத்தியம் மூவருமாக 06 பேர் பங்குபற்றமுடியும். மேடை, ஒப்பனைக்கு உதவியாளர்கள் இருவர் போதுமானது.

62.1.6 நடன/சங்கீத ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகள், வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் வேறொரு அரச பாடசாலையில் இருந்து நடன/சங்கீத ஆசிரியர்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். (வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதிக் கடிதம் சகல மட்டப் போட்டிகளின் போதும் முன்வைக்கப்படவேண்டும்)

**62.2 நேரம் : 18 - 20 நிமிடங்கள்**

**62.3 நாட்டிய நாடகத்திற்கான விதிகள் :**

62.3.1 தரப்பட்ட விடயத்திற்குப் பொருத்தமாக ஆக்கம் அமைதல் வேண்டும். கதை, கதையுடன் தொடர்புடைய பாத்திரங்கள், பாத்திரங்களுக்கிடையிலான தொடர்புகள், என்பன துல்லியமாக வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

62.3.2 கதைக்குரிய வாச்சீக அபிநயம் (பாடல் வரிகள்) பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற இசை உருப்படி நிலையினைத் தவிர்த்து, பாத்திரங்களின் கட்டுக்கோப்புத் தொடர்பான பாடல் வரிகளாக ஆக்கப்பட்டு உரிய இசைவடிவம் பெறுதல் வேண்டும்.

62.3.3 சந்தத்திற்கேற்ப வசன நடை வரிகளும் பொருத்தமான தெளிவான ஆங்கிக அபிநய வெளிப்பாடுகளும் உட்படுத்தப்படல் வேண்டும்.

62.3.4 உடை – பாத்திரங்களுக்குப் பொருத்தமான வகையில் இருத்தல் வேண்டும்.

**62.4 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 29 ஐப்பார்க்க)

**அட்டவணை 29**

| **இல** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | கதைத்தொகுப்பும் கருத்து வெளிப்பாடும் | 20 |
| ii | இயல்பான ஆடல்முறையும் பாத்திர வெளிப்பாடும் | 25 |
| iii | லயப்போக்கு (தாளம், லயம்) | 15 |
| iv | ஆக்கம் | 15 |
| v | ஓத்திசைவு | 10 |
| vi | சமர்ப்பணம் (பொது) | 10 |
| vii | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

**63.0 போட்டி இலக்கம் : 45 தனிநடிப்பு மூன்றாம் பிரிவு தரங்கள் : 10, 11**

**63.1 விடயம்**

63.1.1 போட்டி நடைபெறும் இடத்தில் முன்வைக்கப்படும் நான்கு உரிப் பொருள்களிலிருந்து ஒன்றினைத் திருவுளச்சீட்டு மூலம் தெரிவுசெய்து தனிநடிப்பு ஒன்றினை ஆற்றுகை செய்தல் வேண்டும்.

63.1.2 உரிப்பொருள் வழங்கப்பட்டதன் பின்னர் யாருடனும் தொடர்புகொள்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

63.1.3 ஆற்றுகையின் போது போட்டியாளர் எவ்வித குறிப்புகளையும் தன்னுடன் வைத்திருக்க முடியாது.

**63.2 நேரம்:** ஒவ்வொரு போட்டியாளர்க்கும் தயார் செய்வதற்கு 15 நிமிடங்களும், ஆற்றுகைக்காக 05 நிமிடங்களும் வழங்கப்படும். (நடுவர்களால் 04 நிமிட நிறைவில் சமிக்ஞை ஒன்று வழங்கப்படலாம்)

**63.3 பொதுவான விதிகள்:**

63.3.1 நடிப்பு தொடங்கியதில் இருந்து முடியும் வரை மேடையை வெறுமையின்றி கையாளல் வேண்டும்.

63.3.2 ஒருவர் பல பாத்திரங்கள் மூலமாகவோ அல்லது பல பாத்திரங்கள் முன்னால் உள்ளது போன்று உரையாடல், நடிப்பு மூலமாகவோ வெளிப்படுத்தலாம்.

63.3.3 வேறு பாத்திரங்களாக மாறுவதைக் காட்டும் நேரத்தில் சுழற்சி மூலமோ, பாத்திர இடமாற்றம் மூலமோ காட்டுதல் வேண்டும்.

63.4 தனிநடிப்பு போட்டிக்கான நடுவர்களாக நாடகத்துறை சார்ந்த **இருவரும்** தமிழ்மொழித்துறை சார்ந்த **ஒருவரும்** நியமிக்கப்படவேண்டும்.

**63.5 புள்ளித்திட்டம் :-** 100 புள்ளிகள் (அட்டவணை 30 ஐப்பாரக்க)

## 64.0 போட்டி இலக்கம் : 46 தனிநடிப்பு நான்காம் பிரிவு தரங்கள் : 12, 13

**64.1 விடயம்**

64.1.1 போட்டி நடைபெறும் இடத்தில் முன்வைக்கப்படும் நான்கு உரிப் பொருள்களிலிருந்து ஒன்றினைத் திருவுளச்சீட்டு மூலம் தெரிவுசெய்து தனிநடிப்பொன்றினை ஆற்றுகை செய்தல் வேண்டும்.

64.1.2 உரிப்பொருள் வழங்கப்பட்டதன் பின்னர் யாருடனும் தொடர்புகொள்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

64.1.3 ஆற்றுகையின் போது போட்டியாளர் எவ்வித குறிப்புகளையும் தன்னுடன் வைத்திருக்க முடியாது.

**64.2 நேரம்:** ஒவ்வொரு போட்டியாளர்க்கும் தயார் செய்வதற்கு 15 நிமிடங்களும், ஆற்றுகைக்காக 05 நிமிடங்களும் வழங்கப்படும். (04 நிமிட நிறைவில் நடுவர்களால் சமிக்ஞை ஒன்று வழங்கப்படலாம்)

**64.3 பொதுவான விதிகள்:**

64.3.1 நடிப்பு தொடங்கியதில் இருந்து முடியும் வரை மேடையை வெறுமையின்றி கையாளல் வேண்டும்.

64.3.2 ஒருவர் பல பாத்திரங்கள் மூலமாகவோ அல்லது பல பாத்திரங்கள் முன்னால் உள்ளது போன்று உரையாடல், நடிப்பு மூலமாகவோ வெளிப்படுத்தலாம்.

64.3.3 வேறு பாத்திரங்களாக மாறுவதைக் காட்டும் நேரத்தில் சுழற்சி மூலமோ, பாத்திர இடமாற்றம் மூலமோ காட்டுதல் வேண்டும்.

64.4 தனிநடிப்பு போட்டிக்கான நடுவர்களாக நாடகத்துறை சார்ந்த **இருவரும்** தமிழ்மொழித்துறை சார்ந்த **ஒருவரும்** நியமிக்கப்படவேண்டும்.

**64.5 புள்ளித்திட்டம் :-** 100 புள்ளிகள் (அட்டவணை 30 ஐப்பாரக்க)

**அட்டவணை 30**

| **இல** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | தலைப்பிற்கேற்ற பொருள் வெளிப்பாடு | 20 |
| ii | நடிப்பாற்றல் | 25 |
| iii | உணர்ச்சி வெளிப்பாடு | 20 |
| iv | மேடைக் கையாள்கை | 15 |
| v | குரல் வெளிப்பாடு | 15 |
| vi | நேரம் | 05 |
| | **மொத்தம்** | **100** |

## 65.0 போட்டி இலக்கம் : 47 நாட்டார் பாடல் பிரிவு : திறந்த போட்டி

**65.1 விடயம்:** அவ்வப்பிரதேசத்தில் வழங்கி வரக்கூடிய அல்லது தேடித் தொகுக்கக்கூடிய நாட்டார் பாடல்களைச் சேகரித்து, நாட்டார் பாடலுக்கே உரித்தான ஓசையுடன் பாடுதல். மண்வளச் சொற்கள், பேச்சுமொழிகள் ஆகியவற்றின் இயல்பில் கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

**65.2 நேரம் :** 10 நிமிடங்கள்

**65.3 பொது விதிகள்**

65.3.1 பாடல்கள், முன்னரோ, தற்போதோ பாடநூல்கள்/மொடியூல்களிலோ ஆசிரியர் வழிகாட்டிகளிலோ வெளிவந்ததாக இருத்தல் கூடாது.

65.3.2 பொருத்தமான பாரம்பரிய தாள, வாத்திய, இசைக் கருவிகள் போட்டியாளர்களாலேயே இசைக்கப்படல் வேண்டும். உடுக்கு, டோலக், டொல்கி, பறை, தப்பு, ஹார்மோனியம், சங்கு, சேமக்கலம், கொம்பு, புல்லாங்குழல், புத்தளிப்புக் கருவிகள் இவற்றில் பொருத்தமானவற்றினை மட்டும் பயன்படுத்தலாம். இசைக்கருவிகளை வைத்து வாசிப்பதற்கு தளபாடங்களைப் பயன்படுத்த முடியாது.

65.3.3 தாள வாத்திய அதீத ஒலிகளுக்குள் பாடல்களின் மொழி உச்சரிப்புத் தெளிவு அமுங்கிவிடாது பார்த்துக் கொள்ளல்வேண்டும். **தாள வாத்திய ஓசை வெளிப்பாடுகளின் ஊடாக கருப்பொருளின் பின்புலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.**

65.3.4 ஏற்ற ஒப்பனைக்கும் ஆடை அணிகளுக்கும் புள்ளிகள் உண்டு.

65.3.5 நின்று அல்லது இருந்து பாடமுடியும். அபிநயங்கள் தேவையானவிடத்துச் செய்து கொள்ளலாம். நின்று பாடுவதாயின் காலைத் தூக்காது நின்ற நிலையில் அபிநயித்தல் வேண்டும்.

65.3.6 **மேடைப் பின்னணி அலங்காரங்கள், உபகரணங்கள், பொருட்கள், காட்சிப்படுத்தல்கள் யாவும் முற்றாகத் தவிர்க்கப்படல் வேண்டும்.**

65.4 நாட்டார் பாடல் போட்டிக்கான நடுவர்களாக தமிழ்மொழித்துறை சார்ந்தவர்களே நியமிக்கப்படவேண்டும்.

**65.5 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 31 ஐப்பாரக்க)

**அட்டவணை 31**

| **இல** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | இயல்பான மொழி நடை | 20 |
| ii | இயைபான ஓசை/ஒத்திசைவு | 20 |
| iii | பொருத்தமான தாள வாத்திய இசை | 20 |
| iv | பொருளுக்கேற்ப உணர்ச்சி வெளிப்பாடு | 15 |
| v | அபிநயம் | 10 |
| vi | ஒப்பனை, ஆடை அணிகள் | 10 |
| vii | நேரம் | 05 |
| | **மொத்தம்** | **100** |

## 66.0 போட்டி இலக்கம் : 48 இலக்கிய நாடகம் பிரிவு : திறந்த போட்டி

**66.1 விடயம்: இணைப்பினைப் பார்க்கவும்**

66.1.1 தரப்பட்ட விடயத்திற்குப் பொருத்தமானதாக நாடகம் அமைதல் வேண்டும். இலக்கிய நாடகம் ஆகையால் எல்லோருக்கும் விளங்கக் கூடிய இலக்கியத் தரம் பேணப்படல் வேண்டும்.

66.1.2 வேறு நாடகங்களின் தழுவலாகவோ, பிரதிபண்ணலாகவோ இல்லாது புத்தாக்கமாக இருத்தல் வேண்டும்.

66.1.3 நாடகத்திற்கான இசைக்கருவிகளின் பயன்பாட்டிற்குக் கட்டுப்பாடுகள் ஏதும் கிடையாது. எனினும் அவற்றை இசைப்போர் பாடசாலை ஆசிரியராகவோ, மாணவராகவோ மாத்திரம் இருக்கமுடியும்.

66.1.4 ஒலிநாடாக்கள், மற்றும் இறுவட்டுக்கள் பயன்படுத்தல் கூடாது. சினிமாப் பாடல்களோ, சினிமாப் பாடல் மெட்டுக்களோ பயன்படுத்தலாகாது. பின்னணிக் குரல்கள் போட்டியாளர்களுடையதாகவே இருத்தல் வேண்டும்.

66.1.5 ஆடை, அலங்காரங்கள் பாத்திரங்களுக்குப் பொருத்தமானவையாக இருத்தல் வேண்டும்.

**66.2 நேரம்: 18 - 20 நிமிடங்கள்**

**66.2.1** நேர வரையறையிலிருந்து விலகிச் செல்லும் ஒவ்வொரு நிமிட நேர விலகலுக்கும் மொத்தப் புள்ளிகளிலிருந்து 5 புள்ளிகள் வீதம் கழிக்கப்படும்.

### 66.3 பொதுவான விதிமுறைகள்

66.3.1 அரசியல், இனம், சமயம் மற்றும் சமூகங்கள் ரீதியாக எந்தவொரு தாக்கத்தினையும் எவரொருவருக்கும் ஏற்படுத்தாதவகையில் நாடகப் பிரதி அமைதல் வேண்டும். **இவ்விதி கண்டிப்பானது.**

66.3.2 ஆரம்பக் காட்சியமைப்பை மேடையில் ஒழுங்கமைக்க 10 நிமிடங்கள் மாத்திரம் வழங்கப்படும். மேலதிக நிமிடம் ஒவ்வொன்றிற்கும் ஒரு புள்ளி வீதம் மொத்தப் புள்ளியிலிருந்து கழிக்கப்படும்.

66.3.3 நாடகத்திற்கான பாடகர்கள் தேவைப்படின் நடிகர் எண்ணிக்கைக்கு மேலதிகமாக இரண்டு **மாணவர்களைப்** பயன்படுத்திக் கொள்ளமுடியும். பாடகர்கள் மற்றும் பக்கவாத்தியம் இசைப்போர் மேடைக்குப் பக்கப்புறமாக நடுவர்களால் பார்க்கத்தக்கவாறு இருக்கவேண்டும். அவர்கள் சான்றிதழ் பெறும் உரித்துடையவர்கள் அல்லர்.

66.3.4 நாடக ஆரம்பத்திற் திறக்கப்படும் திரை, நாடகம் நிறைவுறும் போதே மூடப்பெறுதல் வேண்டும்.

66.3.5 நாடகப் பொறுப்பாசிரியர் அன்றேல் நெறியாளருடன் மேலும் இருவர் உதவியாளர்களாக நடிப்பிற்கு வெளியில் நின்று தொழிற்படமுடியும். நாடகம் ஆரம்பித்த பின்னர் உதவியாளர்கள் மேடையினுள் பிரவேசிக்க இயலாது.

66.3.6 கொச்சையான மொழிப்பிரயோகம், சினிமாப் பாணியிலான சித்திரிப்பு என்பன தவிர்க்கப்படல் வேண்டும்.

**66.3.7 மேடையில் பின்தள அமைப்புக்கள் முற்றாகத் தவிர்க்கப்படல் வேண்டும். இருக்கைகள், கையில் வைத்திருக்கக்கூடிய சாதனங்கள் பயன்படுத்தலாம்.**

66.4 இலக்கிய நாடகப் போட்டியின் நடுவர்களாக **தமிழ்மொழித்துறை சார்ந்து 3 பேரும் நாடகத்துறை சார்ந்து 02 பேரும்** நியமிக்கப்படவேண்டும்.

**66.5 புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள் (அட்டவணை 32 ஐப்பாரக்கவும்)

**அட்டவணை 32**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | நாடக ஆக்கம் | 20 |
| ii | நடிப்புத்திறன் | 25 |
| iii | உடையலங்காரம், ஒப்பனை | 10 |
| iv | கலைத்துவச் செழுமை | 15 |
| v | உணர்ச்சி வெளிப்பாடு | 10 |
| vi | பாத்திரப் பொருத்தம் | 10 |
| vii | உத்திகள் | 10 |
| **மொத்தம்** | | **100** |

## 67.0 போட்டி இலக்கம் : 49 வில்லுப்பாட்டு — பிரிவு : திறந்த போட்டி

**67.1 விடயம் :** **இணைப்பினைப் பார்க்கவும்**

**67.2 நேரம் :** 20 நிமிடங்கள்

### சிறப்பு விதிகள்

**67.3 வில்:**

67.3.1 வில்லின் நீளம் அண்ணளவாக 3 மீற்றர் கொண்டது.

67.3.2 வில்லின் நாணிலும் கீழ்த்தண்டிலும் ஆங்காங்கே சதங்கைகள் கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

**67.4 கதை சொல்லலும் பாட்டும்:**

67.4.1 கதை சொல்லும் பாங்கிற்கும் உரையாடற் பாங்கிற்கும் வேறுபாடு தென்படக்கூடியவாறு ஓசை அமைதல் வேண்டும்.

67.4.2 அரசியல், இனம், சமயம் மற்றும் சமூகங்கள் ரீதியாக எந்தவொரு தாக்கத்தினையும் எவரொருவருக்கும் ஏற்படுத்தாதவகையில் வில்லுப்பாட்டுப் பிரதியும் கதை சொல்லலும் அமைதல் வேண்டும். **இவ்விதி கண்டிப்பானது.**

67.4.3 சினிமாப் பாடல்களோ, சினிமாப் பாடல் மெட்டுக்களோ இடம்பெறல் கூடாது.

## 67.5 அமைப்பு

67.5.1 காப்பு, அவையடக்கம், கதை அறிமுகம் என்பவற்றுடன் கதை நிகழ்விட விவரணம் (கற்பனையாயினும்) கதாபாத்திர முன்னுரை என்பன சீராக அமைந்து, கருவின் தன்மை தெளிவாகப் புலப்படும்படி போதனையுடன் நிகழ்ச்சி அமையவேண்டும்.

## 67.6 வில்லுப்பாட்டுக் குழு

67.6.1 வாத்தியக்கருவிகள் வாசிப்பவர் உட்பட ஏழுபேரும் அதே பாடசாலை மாணவர்களாகவே இருத்தல் வேண்டும்.

67.6.2 பிரதான பாடகர் (குரு) கதையைச்சொல்லி. வில்லில் அடித்து இசைத்துப்பாடுதல் வேண்டும். இவரே வில்லுப்பாட்டின் நாயகன் ஆவார்.

67.6.3 பக்கப்பாட்டும் பக்கவுரையும் நகைச்சுவை நயங்களும் இருவரால் மட்டும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இச்செயற்பாடுகளும் பிரதான கருவையே தழுவி அமைதல் வேண்டும்.

67.6.4 ஏனைய நால்வருள் ஒருவர் விற்கடம் வாசிப்பார். இன்னொருவர் தோற்கருவியினை முழக்குவார். மற்றுமொருவர் ஹார்மோனியத்தை வாசிப்பார். ஹார்மோனியம் இல்லாதவிடத்துச் சுருதிப்பெட்டியால் சுருதியை வாசிப்பார். நான்காமவர் உடுக்கு என்னும் கருவியை அடிப்பர். இங்கு தரப்பட்ட கருவிகள் மட்டுமே பயன்படுத்தப்படல் வேண்டும்.

67.6.5 ஒரே சீராக ஆடி அசைதல் தவிர்க்கப்பட்டுள்ளது.

## 67.7 பக்க வாத்தியங்கள்

67.7.1
- (i) விற்கடம் (வில்லுடன் இணைத்துக் கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.)
- (ii) ஹார்மோனியம்
- (iii) உடுக்கு

**பின்வரும் நான்கு தோற்கருவிகளுள் ஒன்று**

67.7.2
- (i) மிருதங்கம்
- (ii) தபேலா
- (iii) டோல்கி
- (iv) டோலக்

67.7.3 வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளுக்கு போட்டியாளரே பக்கவாத்தியங்களையும் இசைத்தல் வேண்டும்.

## 67.8 ஆடை அலங்காரம்

67.8.1 பொருத்தமான ஆடை அலங்காரங்கள் ஒரே சீராக இருத்தல் வேண்டும். எனினும் வீணான ஆடம்பர ஆடை அணிகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

67.8.2 ஆண், பெண் பாலினர் தத்தம் கலாசார உடைகளில் பங்கேற்க வேண்டும்.

**67.9. புள்ளித்திட்டம்:** 100 புள்ளிகள் (அட்டவணை 33 ஐப்பார்க்கவும்)

**அட்டவணை 33**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | நடையும் இசையும் | 20 |
| ii | ஆக்கமும் நயமும் | 30 |
| iii | பக்கப்பாட்டு, வினாக்கள், நகைச்சுவை | 15 |
| iv | உணர்ச்சி வெளிப்பாடு | 15 |
| v | அபிநய பாவங்கள் | 10 |
| vi | ஆடை அலங்காரம் | 05 |
| vii | நேரம் | 05 |
| | **மொத்தம்** | **100** |

## 68.0 போட்டி இலக்கம் : 50 விவாதம். பிரிவு : திறந்த போட்டி

### 68.1 விடயம் :

68.1.1 நடுவர்களால் தெரிவு செய்து தரப்படும் தலைப்பு ஒன்றினை ஒட்டியும் வெட்டியும் விவாதித்தல் வேண்டும்.

68.1.2 தமிழிலக்கியத்தில் காணப்படும் கருப்பொருள்கள், பாத்திரங்கள், பண்புகள், விழுமியங்கள் முதலான விடயங்களில் மாணவர்களின் தேடல்கள் அமைதல் வேண்டும்.

68.1.3 இலக்கணத்தின் இன்றியமையாமை இலக்கியமும் இலக்கணமும் பற்றிய மொழித் திறனோடு ஒட்டி விவாதிக்கும் திறன் பெற்றிருத்தல் வேண்டும்.

68.1.4 மொழி, பண்பாடு, கலாசாரம் என்பவற்றில் இணையம், நவீன ஊடகங்கள் மற்றும் கணினியின் செல்வாக்கு என்ற விடயங்களும் சேரத்துக் கொள்ளப்படலாம்.

### 68.2 நேரம் : 30 நிமிடங்கள் -

தயார்ப்படுத்தலுக்கு 8 நிமிடங்கள்.
வாதத்திற்கு 22 நிமிடங்கள்

**நேரப்பிரிப்பு**

| | குழு 1 | குழு 2 |
|---|---|---|
| தலைவர் | 3 | 3 |
| உறுப்பினர் 1 | 3 | 3 |
| உறுப்பினர் 2 | 3 | 3 |
| தொகுப்புரை | 2 | 2 |

### 68.3 பொது விதிகள்

68.3.1 தலைப்புக்குட்பட்டே விவாதம் அமைதல் வேண்டும்.

68.3.2 ஒரு குழுவில் மூவர் மாத்திரம் கலந்துகொள்ள வேண்டும்.

68.3.3 சமயம், மொழி, இனம், அரசியல் முதலியவற்றில் விரும்பத்தகாத பாதிப்புகள் ஏற்படாத பாங்கில் விவாதம் அமைதல் வேண்டும். போட்டி நடைபெறும் பொழுது எதிரணியினருக்குத் தொந்தரவு செய்யாதிருத்தல் வேண்டும்.

68.3.4 சமய, சமூக, பால்நிலை ரீதிகளில் எதிரணியினரின் விவாதத்திறனைக் குறைப்பதற்கான முயற்சிகள் தவிர்க்கப்பட வேண்டும். மீறும் பட்சத்தில் புள்ளிகள் குறைக்கப்படவோ, போட்டியிலிருந்து நீக்கப்படவோ முடியும்.

68.3.5 போட்டியின் ஆரம்பத்தில் குழுத் தலைவராகச் செயற்படுபவரே, போட்டிச் சுற்றுக்கள் முடியும் வரை தலைவராகச் செயற்படுதல் வேண்டும். இடைநடுவில் தலைவரை மாற்றுதல் முடியாது.

68.3.6 போட்டியில் பங்கு கொள்ளும் எந்தவொரு அணியும், ஒரு போட்டிச் சுற்றில் பங்குகொண்டு வெற்றியீட்டி, அடுத்தச்சுற்றுக்கு தெரிவாகியுள்ள சந்தர்ப்பம் ஒன்றில், அச்சுற்றில் பங்குகொள்ளாது, இடைவிலகிச் செல்லமுடியாது.

### 68.4 புள்ளித்திட்டம்: 100 புள்ளிகட்கு

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | பொருள் | 30 |
| ii | பேச்சுவன்மை | 20 |
| iii | சமயோசிதமான வாதத்திறன் | 25 |
| iv | குழுவொருமைப்பாடு | 15 |
| v | நேரத்துக்குள் விடய அடக்கம் | 05 |
| vi | நிலை | 05 |
| | **மொத்தம்** | **100** |

69.0 கீழே தரப்பட்டள்ள தமிழ்மொழித்தின வாழ்த்துப் பாவினை போட்டிகளின் போதும், தமிழ்மொழித்தின விழாக்களின் போதும் சகல மட்டங்களிலும் இசைத்தல் வேண்டும்.

## தமிழ் மொழித்தின வாழ்த்து

வாழ்க தமிழ்த்தினம் வளர்க தமிழ்த்தினம்
வாழிய வாழியவே!
மாண்புறு முத்தமிழ் வித்தகரின் நினை
வாம் தினம் வாழியவே!

இலங்கையில் மாணவர் வளங்கொள் தமிழ்ப்பயிர்
இமயமெனப் பொலிய
ஏற்புறு முத்தமிழ் போட்டி பண்பாட்டின்
எழுச்சிக்கு வித்திடவே.

சங்கத் திருப்பினில் பங்கமி லாதிருந்
தாண்ட தமிழ் மொழியே
சால்புயர் கல்வித் தமிழ்மொழிப் பிரிவுயர்
தகைமைக்கு வித்திடவே.

இந்து கிறிஸ்தவம் பௌத்தமிஸ் லாம்நெறி
ஏற்றம் மிகுந்த தமிழ்
எம்முன்னே தேசிய ஒற்றுமை நிலைபெறும்
எழில்தினம் வாழியவே!

-திமிலைத்துமிலன்-

நாலக களுவெவ
செயலாளர்
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
“இசுறுபாய”
பத்தரமுல்லை

# அகில இலங்கைத் தமிழ்மொழித் தினம் - *2026*

## அகில இலங்கைத் தமிழ்மொழித் தினப் போட்டிகள் தொடர்பான கல்விச் செயலாளரின் 01/2026 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தின் *2026* ஆம் ஆண்டுக்கான இணைப்பு

**தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை**
**கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**
**இசுருபாய**



CS Scanned with CamScanner

எனதுஇல : ED/01/05/03/05/13-11

தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை,
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு,
இசுருபாய.
2026.01.30

சகல மாகாண பிரதம செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பாடசாலை அதிபர்களுக்கும்

**அகில இலங்கைத் தமிழ்மொழித்தினப் போட்டிகள் தொடர்பான கல்விச் செயலாளரின் 01/2026 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான இணைப்பு**

01. 2026 ஆம் ஆண்டுக்குரிய அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டிகள் யாவும், இவ் இணைப்பில் குறிப்பிடப்படும் விடயங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு அமைவாகவும் சுற்றுநிருப இலக்கம் 01/2026 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாகவும் நடைபெறும்.

02. இவ்வருடம் 50 போட்டிகளை, தரம் 06 தொடக்கம் தரம் 13 வரையிலான வகுப்புகளுக்கு நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. 2025 க.பொ.த. சாதாரண தர (2026 பெப்ரவரி பரீட்சை எழுதவுள்ளவர்கள்) மாணவர்கள் திறந்த போட்டிப் பிரிவில் மாத்திரம் பங்குபற்ற முடியும்.

04. 2026ஆம் ஆண்டிற்குரிய போட்டிகள் நடாத்தப்பட வேண்டிய திகதிகள் பின்வருமாறு

1.பாடசாலை மட்டப் போட்டிகள் - 2026.03.28 ஆம் திகதிக்கு முன்னர்
2.வலய மட்டப் போட்டிகள் - 2026.04.30 ஆம் திகதிக்கு முன்னர்
3.மாகாண மட்டப் போட்டிகள் - 2026.06.19 ஆம் திகதிக்கு முன்னர்

05. தேசிய மட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் 2026.07.10ஆம் திகதிக்கு முன்னர் கல்வி அமைச்சின் தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளைக்கு அனுப்பப்படல் வேண்டும்

06. 2026 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்டப் போட்டிகள் யாவும் 2026.09.12, 13 மற்றும் 2026.09.19, 20 ஆகிய திகதிகளில் கொழும்பில் நடைபெறும். தேசிய மட்ட எழுத்தாக்கப் போட்டிகள் பற்றி விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**இணைப்புகள் வழங்கப்பட்டுள்ள போட்டிகள் பற்றிய விபரங்கள்**

| தொ.இல | போட்டி இலக்கங்கள் | போட்டியின் பெயர் | பிரிவு/பிரிவுகள் |
|---|---|---|---|
| *1* | 23, 24 | பேச்சு | 01, 02 |
| *2* | 27, 28 | பாவோதல் | 01, 02, |
| *3* | 29 30 | இலக்கிய விமர்சனம் | 03, 04 |
| *4* | 33 34 35 36 | இசை - தனி | 01, 02, 03, 04 |
| *5* | 37, 38 | இசை - குழு | குழு – I, குழு - II |
| *6* | 39, 40, 41, 42 | நடனம் - தனி | 01, 02, 03, 04 |
| *7* | 43 | நடனம் - குழு - I | குழு I |
| *8* | 44 | நாட்டிய நாடகம் | தி.போ |
| *9* | 48 | இலக்கிய நாடகம் | தி.போ |
| *10* | 49 | வில்லுப்பாட்டு | தி.போ |



CS Scanned with CamScanner

**1. போட்டி இல : 23 பேச்சு முதலாம் பிரிவு : தரங்கள் 06, 07**

**1.1 விடயத் தலைப்புகள் :**

1. பேராசிரியர் கா.சிவத்தம்பி
2. இயற்கையைப் பேணுவோம்
3. மனிதவாழ்வும் தொழிலுட்பமும்
4. வாக்கினிலே இனிமை வேண்டும்

**2. போட்டி இல : 24 பேச்சு இரண்டாம் பிரிவு : தரங்கள் 08, 09**

**2.1 விடயப் பரப்பு :**

1 செம்மொழியாம் தமிழ்மொழி
2. தேசிய ஒற்றுமை
3. இளைஞர்களும் சமூக வலைத்தளங்களும்
4. இலக்கிய இன்பம்

**3. போட்டி இல : 27 பாவோதல் முதலாம் பிரிவு : தரங்கள் 06, 07**

**3.1 விடயம்**

**3.1.1 திருக்குறள் :** அதிகாரம் - 42 : கேள்வி

அதிகாரம் - 43 : அறிவுடைமை

(திருக்குறள் பகுதிகளுக்காக மு. வரதராசன் அவர்களின் உரை சிபாரிசு செய்யப்பட்டுள்ளது)

**3.1.2 பாரதியார் கவிதைகள் : பாரதியார் பாடல் - 31**

உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனைசெய்வோம் -வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம் - வெறும்
வீணருக் குழைத்துடலம் ஓயமாட்டோம்

**3.1.3 நாலடியார் பாடல் : 205**

இன்னர் இனையர் எமர் பிறர் என்னும் சொல்
என்னும் இலராம் இயல்பினால் - துன்னித்
தொலைமக்கள் துன்பம் தீர்ப்பாரோ யார்மாட்டும்
தலைமக்கள் ஆகற்பா லார்

**4. போட்டி இல : 28 பாவோதல் இரண்டாம் பிரிவு : தரங்கள் 08, 09**

**4.1 விடயம்**

**4.1.1 திருக்குறள் :** அதிகாரம் - 63 : இடுக்கண்அழியாமை

அதிகாரம் - 66 : வினைத்தூய்மை

(திருக்குறள் பகுதிகளுக்காக மு. வரதராசன் அவர்களின் உரை சிபாரிசு செய்யப்பட்டுள்ளது)

**4.1.2 நாலடியார் பாடல் - 174**

இறப்ப நினையுங்கால் இன்னாது எனினும்
பிறப்பினை யாரும் முனியார்; - பிறப்பினுள்
பண்புஆற்றும் நெஞ்சத்தவர்களோடு எஞ்ஞான்றும்
நண்புஆற்றி நட்கப்பெறின்

**4.1.3 பாரதிதாசன் கவிதைகள் : பாரதிதாசன் பாடல் - தமிழ்ப்பேறு**

ஏடெடுத் தேன்கவி ஒன்று வரைந்திட
"என்னை எழு"தென்று சொன்னதுவான்!
ஓடையுந் தாமரைப் பூக்களும் தங்களின்
ஓவியந் தீட்டுக, என்றுரைக்கும்!
காடும் கழனியும் கார்முகிலும் வந்து
கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்!
ஆடும் மயில்நிகர் பெண்களெல்லாம் உயிர்
அன்பினைச் சித்திரம் செய்க, என்றார்!

**4.1.4 இனியவை நாற்பது : பாடல் - 24**

வெல்வது வேண்டி வெகுளாதான் நோன்பு இனிதே
ஒல்லும் துணையும் ஒன்று உய்ப்பான் பொறை இனிதே
இல்லது காமுற்று இரங்கி இடர்ப்படார்
செய்வது செய்தல் இனிது

**5. போட்டி இல : 29 இலக்கிய விமர்சனம் மூன்றாம் பிரிவு : தரங்கள் 10 ,11**

**5.1 விடயம்**

**5.1.1** புதுக்கவிதை - **மற்றவர்க்காய்ப்பட்ட துயர் கவிஞர்** -மஹாகவி து.உருத்திரமூர்த்தி

போட்டார் மணி அடிக்கப்,
'போகட்டும்' என்று சொல்லிக்
காட்டர் கொடி எடுத்துக் காட்டக்,
கனைத்தபடி
ஓட்டம் தொடங்கிற்று உயிர்பெற் றொருவண்டி.

கட்டிடங்கள் கீரைக் கழனிகளாய் நீள் கடல்போல்
வெட்ட வெளியாய் வெறும் புல் அளவேபோல்
நெட்டை நிலங்களிலே நிற்கின்ற தென்னைகளாய்
மாறிவரக் கண்டு மனம்விட் டிருக்கையிலே
காறி உமிழ்வதற்கென் யன்னற் கதவிடுக்கில்
வேறொருவன் நீட்டும் தலைகண்டேன்.

வெள்ளைமயிர் !
பாவம் கிழவன் பழுத்த உடல் மீது
சாவின் வெளுப்பு சனியோடு வெற்றிலையின்
காவி நீர் துப்பிக் கடைவாய் துடையாமல்
நிற்கின்றான் மீண்டும் நிமிர்ந்தும், நிமிராமல்.

கற்கொண்ட நெஞ்சம்
கனிவுண்டெழுந்து கொண்டு உட்கார விட்டேன்,
உவகையோ டுட்கார்ந்தான்.

வண்டி முழுதும் சனங்கள்,
வலதுகையை
மீண்டு கொடுத்து, விழிமுன் மரச்சுவரே
கண்டபடி நின்ற என் கால்கள் கடுத்தன.
யன்னலிலே வைத்த கரத்தில் தலைசாய்த்துச்
சின்னக் கிழவனோ சிற்றுலகை முற்றும் மறந்து
என்ன நினைவும் இல்லாமல்
துயின்றிருந்தான்.

ஆதலினால் இன்பம் அடைந்தேனோ?
அப்பனே,
வேதனையிற் கூட விளையும் சுகம் உளதோ ?
சாதலிலும் பேரின்பம்
காணல் தகும்போலும்?

எட்டுமணி நேரம்
எழுந்து நின்ற அவ்வளவில்
கிட்டும் நிறைவு மனதில் கிளுகிளுக்கச்
'சிட்டெழிலூர்' என்றின்று செப்பப் படுகின்ற

'சிட்டுக்காடு' என்னும் சிற்றூரில்
வண்டி கொண்டு
விட்டுவிட, வீடு விரைகின்றேன்.
மற்றவர்க்காய்ப்
பட்டதுயர்
இன்பம் பயக்கும் என்று பாடுகிறேன்.

**5.1.2 புறநானூறு – 12**

பாடியவர்- நரிவெரூஉத்தலையார்
திணை- பாடாண்திணை
துறை - செவியறிவுறூஉ; பொருண்மொழிக்காஞ்சி

எருமை அன்ன கருங் கல் இடை தோறு
ஆனின் பரக்கும் யானைய முன்பின்
கானக நாடனை நீயோ பெரும
நீ ஓர் ஆகலின் நின் ஒன்று மொழிவல்
அருளும் அன்பும் நீக்கி நீங்கி நீங்கா
நிரயம் கொள்பவரோடு ஒன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி
அளிதோ தானே அதுபெறல் அருங்குரைத்தே

**6. போட்டி இல : 30 இலக்கிய விமர்சனம் நான்காம் பிரிவு : தரங்கள் 12 ,13**

**6.1** விடயம்

**6.1.1** கவிதை - முத்து நகை கவிஞர்- ஜின்னா ஷரீபுத்தீன்

தானியங்கள் பயிரிடுவான் உழவன் கல்வி
        தந்திடுவான் நல்லாசன் இதுபோற் பாரில்
தான்தனக்கென் றெவருமொரு தொழிலைச் செய்து
        தரணிதனிற் பிறந்தகடன் தீர்த்து வாழ
ஏன்கொள்வ ரோபகைமை யேற்றத் தாழ்வு
        ஏழ்மைதனஞ் சாதியினம் எனும்பே தங்கள்
ஊனுடலி லோடுகின்ற குருதி யார்க்கும்
        ஒருநிறமென் றறிந்தொன்றி வாழ்வதென்றோ

சாதியினம் மதம்மொழியோ டவர வர்தம்
        சரீரத்தின் நிறங்கொண்டும் பேதங்கொள்வோர்
போதிநிழல் தன்னடியில் ஞானம் பெற்ற
        புத்தபிரான் பொன்மொழியை மறக்கலாமோ
ஆதியிறை முன்மாந்த ராய்ப் பிறந்தோர்
        அனைவருமே ஓரினந்தானாண் பெண்ணன்றி
சாதியின மென்றொன்றும் இல்லை பாரிற்
        சமத்துவமாய் வாழ்கவெனப் போதித்தானே

இறையென்ப தொன்றேதான் மக்கள் தத்தம்
        இச்சையினுக் குவந்தபடி தொழுவா ரந்த
இறைவனுக்கு வெவ்வேறாய் நாமம் சூட்டி
        ஏன்மனிதர் மதப்பூசல் செய்கின் றாரோ
கறையகற்றி யுள்ளமதைத் தூய்மை செய்து
        கண்ணியமாய் வாழ்கவென்று மதங்கள்கூற
துறையறியா மடைமைகொண்டு மாந்த ரின்று
        துன்புற்று வாழ்வதென்ப திழிவா மம்மா

அறிவினுக்கோ ரழிவென்ப தில்லை யன்பு
        அனைவரையும் வெல்லுமொரு நல்ல பண்பு
வறியவருக் கிரங்கிடுமே நல்ல வுள்ளம்
        வலுவில்லார் தமையடிமை கொள்ளல் தாழ்வாம்
நெறிபிறழ்ந்து வாழ்ந்திடுங்கா லழிவே மிஞ்சும்
        நெஞ்சறியத் தீமைசெயின் பாவம் விஞ்சும்
குறிதவறிப் போனசிலை போலில் லானற்
        கொள்கையொடு வாழ்வதொன்றே யுயர்வா மம்மா

**6.1.2** **புறநானூறு – 147**

பாடியவர் - பெருங்குன்றூர்க்கிழார்
திணை– பெருந்திணை
துறை – குறுங்கலி, தாபதநிலை

கல் முழை அருவரிப் பல் மலை நீந்தி,
சீறியாழ் செவ்வழி பண்ணி வந்ததை,
கார் வான் இன் உறை தமியள் கேளா,
நெருநல் ஒரு சிறைப் புலம்புகொண்டு உறையும்
அரி மதர் மழைக் கண், அம் மா அரிவை
நெய்யொடு துறந்த மை இருங் கூந்தல்
மண்ணுறு மணியின் மாசு அற மண்ணி,
புது மலர் கஞல, இன்று பெயரின்,
அதுமன், எம் பரிசில் - ஆவியர் கோவே!

**07 போட்டி இல : 33 இசை – தனி முதலாம் பிரிவு : தரங்கள் 06, 07**

**7.1 விடயம் :**

**'நெருப்பினில் எரியாது'** ஈழத்துக்கவி அகளங்கன் அவர்களுடைய கவிதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது. ஒரே இராகத்திலும் ஒரே தாளத்திலும் பாடுதல் வேண்டும். நடைமாற்றம் செய்யலாம். புதிய இசையமைப்பிலே பாடப்படல் வேண்டும். நேரத்திற்கேற்ப பாடல் வரிகளைத் தெரிவு செய்யலாம்.

**7.2 நேரம் : 04 - 05 நிமிடங்கள்**

**7.3 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 01/2026 ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க**

**எங்கள் தமிழ்**

**பல்லவி**

நெருப்பினில் எரியாது நீரினில் அமிழாது
விருப்பினில் நாம்பேசும் எங்கள் தமிழ் - இது
விண்ணோர்க்கும் அமுதான விந்தைத்தமிழ்

**அனுபல்லவி**

பொருப்பினில் உருவாகி புலவர்க்கு உயிராகி
திருக்குற ளாற்பொலிந்த எங்கள் தமிழ் - தெய்வத்
திருப்புகழால் நிறைந்த தெய்வத்தமிழ்

**சரணங்கள்**

சங்கத் திருப்பாட்டு சர்க்கரையாய் இனித்திடும்
சம்பந்தர் தேவாரம் சாவையும் தடுத்திடும்
திங்கள்நிகர் காவியங்கள் திசையெல்லாம் பரந்திடுமே



CS Scanned with CamScanner

திருமுறை பாசுரத்தால் தீமையெல்லாம் பறந்திடுமே

பரணி உலாவென்றும் பாவையொடு கோவையென்றும்
தரணி புகழ்பனுவல்த் தமிழெங்கள் உயிராமே
அறனில் பலகவிதை அருளில் பலகவிதை
திறனில் பலகவிதை தீந்தமிழ்க் கவிதைகளாம்

அகத்தியர் முதலாக வீரமா முனிவர் வரை
அகம் புறம் எனத்தந்த இலக்கணம் பலவாகும்
செகத்தியல் பொருளெல்லாம் சிறப்புடன் பாடிவைத்த
சேந்தமிழை நாம்மறவோம் செந்தேனாய் நுகர்ந்திடுவோம்

இயலிசை நாடகங்கள் இன்பந்தரும் உரைநடைகள்
மயல்மிகு மனத்தையெல்லாம் மாற்றிநல் ஏற்றந்தரும்
வள்ளுவர் இளங்கோவும் வளம் மிகு கம்பனுமே
வடித்தவை படித்தவர்கள் வாழ்வாங்கு வாழவல்லார்.

சொல்லரும் அருளாளர் சேக்கிழார் மூவரொடு
நல்லமணி வாசகனார் நம்கச்சி நாவலனார்
எல்லையில்லாப் புகழ்சேர்த்த எம்புலவன் பாரதியும்
பல்லோரும் புகழ்விபுலா னந்தர்வீர மாமுனிவர்

உமறுவும் கவிமணியும் பாரதி தாசனொடு
ஊரெல்லாம் புகழ் கண்ண தாசனென
உயர்ந்தோர் வளர்த்த தமிழ் உயிரோடு கலந்ததமிழ்
உலகுக்கு வழிகாட்டும் உண்மைத்தமிழ்

**அறிவுறுத்தற் குறிப்பு:**

- தமிழ்த்தினப்போட்டி நடைபெறுகின்ற பொழுது கோட்டமட்டத்திலே தெரிவுசெய்கின்ற பாடலையே தேசிய மட்டம் வரை பாடுதல் வேண்டும்.

- கோட்ட, வலய, மாகாண, தேசிய மட்டப்போட்டிகளின் போது மாணவரால் பாடப்படுகின்ற பாடலின் எழுத்து வடிவம் பாடசாலை அதிபராலும், சங்கீத ஆசிரியராலும் உறுதிப்படுத்தப்பட்டு போட்டி ஏற்பாட்டுக்குழுவிடம் வழங்கப்படுவது அவசியம்.



CS Scanned with CamScanner

**08. போட்டி இல : 34 இசை – தனி இரண்டாம் பிரிவு : தரங்கள் 08, 09**

**8.1 விடயம்**

தமிழ் வாக்கேயகாரர்களான பாபநாசம் சிவன், முத்துதாண்டவர், கோபாலகிருஷ்ண பாரதியார், அருணாசலக்கவிராயர் இவர்களால் இயற்றப்பட்ட தமிழ் மத்திமகால கீர்த்தனை ஒன்றினைப் பாடுதல். தேவைக்கேற்ப சங்கதிகளை இணைத்துக் கொள்ளலாம். சிட்டைஸ்வரம் தவிர்க்கப்பட வேண்டும்.

**8.2 நேரம் :** 05 – 06 நிமிடங்கள்

**8.3 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 01/2026 ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க**

**09. போட்டி இல : 35 இசை – தனி மூன்றாம் பிரிவு : தரங்கள் 10, 11**

**9.1 விடயம்**

கல்யாணி, கீரவாணி, பந்துவராளி, சிம்மேந்திரமத்திமம், சண்முகப்ரியா, ரஞ்சனி, கானடா, ஆரபி, ஆபோகி, பூர்வகல்யாணி ஆகிய ஏதேனும் ஒரு இராகத்தில் அமைந்த தமிழ் மத்திமகால கீர்த்தனை ஒன்றினை சிட்டைஸ்வரத்துடன் பாடுதல். சிட்டைஸ்வரம் இல்லாத கீர்த்தனைகளுக்கு சிட்டைஸ்வரங்கள் ஆக்கம் செய்யலாம்.

**9.2 நேரம் :** 06 – 08 நிமிடங்கள்

**9.3 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 01/2026 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தைப் பார்க்க**

**10. போட்டி இல : 36 இசை – தனி நான்காம் பிரிவு : தரங்கள் 12, 13**

**10.1 விடயம்**

ஒரு இராக, தாளத்தில் அமைந்த தமிழ் மத்திமகால கீர்த்தனையினைத் தெரிவு செய்து, அக் கீர்த்தனை அமைந்துள்ள இராகத்தினை ஆலாபனை செய்து, கீர்த்தனையைப் பாடி, பொருத்தமான இடத்தில் நிரவல் செய்து, அவ்விடத்தில் முதலாம், இரண்டாம் காலத்தில் கற்பனைஸ்வரங்களைப் பாடுதல் வேண்டும்.

**10.2 நேரம் -** 12 – 15 நிமிடங்கள்

**10.3 புள்ளித்திட்டம் - கல்வியமைச்சின் செயலாளரின் 01/2026 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தைப் பார்க்க**



CS Scanned with CamScanner

**11. போட்டி இல : 37 இசை – குழு - I தரங்கள் 06, 07, 08, 09**

**11.1 விடயம்**

பாரதிதாசன் அவர்களின் **'கனியிடை ஏறிய சுளையும்'** என்ற பாடலை இராகமாலிகையாகப் பாடுதல் வேண்டும். குறைந்தது நான்கு இராகங்களில் மெட்டமைக்கப்படவேண்டும். இலகுவான சிட்டைஸ்வரங்கள் இடம்பெறலாம். தாள நடை மாற்றங்கள், செய்யலாம். ஜதிப்பயன்பாடு தவிர்க்கப்படவேண்டும். நேரத்திற்கேற்ப பாடல் வரிகளைத் தெரிவு செய்யலாம். புதிய இசையமைப்பாக இருத்தல் வேண்டும். பக்கவாத்தியங்கள் தவிர்க்கப்படவேண்டும். பாடும் மாணவர் தொகை 8 தொடக்கம் 10 ஆக இருத்தல் அவசியம்.

**11.2 நேரம் :** 06 – 08 நிமிடங்கள்

**11.3 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 01/2026 இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க**

**தமிழின் இனிமை**

கனியிடை ஏறிய சுளையும்- முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும், - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

பொழிலிடை வண்டின் ஒலியும் - ஓடைப்
புனலிடை வாய்க்கும் கலியும்,
குழலிடை வாய்க்கும் இசையும்- வீணை
கொட்டிடும் அமுதப் பண்ணும்,
குழவிகள் மழலைப் பேச்சும் - பெண்கள்
கொஞ்சிடும் இதழின் வாய்ப்பும்,
விழைகுவ னேனும், தமிழும் -நானும்
மெய்யாய் உடலுயிர் கண்டீர்!

பயிலுறும் அண்ணன் தம்பி,- அக்கம்
பக்கத் துறவின் முறையார்,
தயைமிக உடையாள் அன்னை – என்னைச்
சந்ததம் மறவாத் தந்தை,
குயில்போற் பேசிடும் மனையாள், - அன்பைக்
கொட்டி வளர்க்கும் பிள்ளை,
அயலவராகும் வண்ணம் - தமிழ் என்
அறிவினில் உறைதல் கண்டீர்!

நீலச் சுடர்மணி வானம் - ஆங்கே
நிறையக் குளிர்வெண் ணிலவாம்,
காலைப் பரிதியின் உதயம்- ஆங்கே
கடல்மேல் எல்லாம் ஒளியாம்,
மாலைச் சுடரினில் மூழ்கும் - நல்ல
மலைகளின் இன்பக் காட்சி,
மேலென எழுதும் கவிஞர் – தமிழின்
விந்தையை எழுதத் தரமோ?

செந்நெல் மாற்றிய சோறும் - பசுநெய்
தேக்கிய கறியின் வகையும்,
தன்னிகர் தானியம் முதிரை, - கட்டித்
தயிரோடு மிளகின் சாறும்,
நன்மதுரஞ்செய் கிழங்கு – கானில்
நாவிலினித்திடும் அப்பம்,
உன்னை வளர்ப்பன தமிழா! – உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே!

**12. போட்டி இல : 38 இசை – குழு - II தரங்கள் 10, 11, 12, 13**

**12.1 விடயம்**

வீணைக்குப்பையர், பச்சிமிரியம் ஆதியப்பையர், பாபநாசம் சிவன், டைகர் கே. வரதாச்சாரியார், கே. பொன்னையாபிள்ளை, டி.கே. கோவிந்தராவ், வி.எஸ். கோமதி சங்கரையர், கோடீஸ்வர ஐயர், தஞ்சாவூர் சங்கரையர், மாயூரம் விஸ்வநாத சாஸ்த்திரி, வரகூர் க. முத்துக்குமாரசாமி, பெரியசாமித்தூரன் போன்றவர்களால் இயற்றப்பட்ட, ஒரே இராகத்தில், ஆதி தாளத்திலமைந்த தமிழ்த் தான வர்ணத்தைத் தெரிவுசெய்து பாடவேண்டும். வர்ணம் இரண்டு காலத்திலும் பாடப்படுதல் வேண்டும்.

**குறிப்பு : 1) வர்ணசாகரம் - சங்கீதகலாநிதி டி.கே. கோவிந்த ராவ்**

**2) தான வர்ணக்கடல் - வி.எஸ். கோமதி சங்கரையர்**

**(மேற்குறிப்பிட்ட நூல்களையும் வர்ணத்தெரிவுக்காகப் பயன்படுத்தலாம்.)**

அத்துடன், ஈழத்து இசைவித்துவான் ப்ரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்களுடைய **'வருவேன் வருவேனென்று'** என்ற மோகன இராகத்திலமைந்த பதத்தினை உரிய இசையமைப்புடன் பாடுதல் வேண்டும்.

**12.2 நேரம் -** 12 – 14 நிமிடங்கள்

**12.3 புள்ளித்திட்டம் - கல்வியமைச்சின் செயலாளரின் 01/2026 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தைப் பார்க்க**

**பதம்**

**தாளம்: ஆதி**
**இராகம் : மோகனம்**
**இயற்றியவர் : ப்ரம்மஸ்ரீ வீரமணி ஐயர்**

**பல்லவி**

வருவேன் வருவேன் என்று வாக்குறுதி அளித்த
வடிவேலன் வருவானோடீ சகியே

**அனுபல்லவி**

தருவேன் தருவேன் இன்பம் தையலே ஜீவனென்று
முருகேசன் சொன்னதெல்லாம் முற்றும் மறந்தாரோடீ

**சரணம்**

பச்சைமயிலும் என்னை பார்த்துப் பரிகசிக்க
பாங்கியர் பித்தமென்று ஏங்கி சிரிசிரிக்க
இச்சை கொண்ட எந்தன் இதயம் துடிதுடிக்க
இத்தனையும் மறந்து என்னை அடியிருத்த

**13. போட்டி இல : 39 நடனம் - தனி முதலாம் பிரிவு தரங்கள் 06, 07**

13.1. விடயம் - அபிநயப்பாடல்

பாடல் - தேவகி வசுதேவன்...
பாடல் இயற்றியவர்- நிலா இராமமூர்த்தி
இராகம் - காபி
தாளம் - ஆதி

தேவகி வசுதேவன் பெற்ற செல்வமே கோபாலா
யசோதை நந்தலாலா..........
உன்னை ஆவலோடு காண வந்தேன்
அருள்புரிவாயே கொஞ்சம் தயை புரிவாயே

பாவி கம்சனை வதைத்த
பால கிருஷ்ணனே............
பாம்படியிலே பாம்பணை மேல்
பள்ளி கொண்ட ரங்கனே......

நாவினிக்க மனமினிக்க
நாளும் உன்னையே துதிக்க
நீலமேக சியாமளனே
நித்ய மங்களம் தருவாயே.....

ஆயர் பாடிதன்னில் பசுமாடு கன்று மேய்க்கும்
ஆனந்த கோவிந்த கோபாலா ரங்கனே
அருள்புரிவாயே கொஞ்சம் தயை புரிவாயே.....

13.2 பொதுவான விதிகள் -
- 14.2.1 இந் நடனத்தில் பொருத்தமான அடவுகள் இடம்பெறலாம்.
- 14.2.2 நட்டுவாங்கத்தாளமும் வாய்ப்பாட்டு இசையும் போதுமானவை.
- 14.2.3 அணிசேர் இசைக்கருவிகள் பயன்படுத்த முடியாது.

கல்வியமைச்சின் செயலாளரின் 01/2026ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தைப் பார்க்க

13.3 நேரம் - 05- 06 நிமிடங்கள்

13.4 புள்ளித்திட்டம் - கல்வியமைச்சின் செயலாளரின் 01/2026ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தைப் பார்க்க

**14. போட்டி இல :40 நடனம் – தனி இரண்டாம் பிரிவு தரங்கள் 08, 09**

**14.1 விடயம் : கீர்த்தனை**

பாடல் - ஆனந்த நடனம்
பாடல் இயற்றியவர் - தாரநடராஜன்
இராகம் - ஹம்ஸானந்தி
தாளம் - ஆதி

**பல்லவி**

ஆனந்த நடனம் ஆடுவதேன் மயிலே
அழகன் முருகனை கண்டதனாலோ....
(ஆனந்த நடனம் )

**அனுபல்லவி**

மான் விழியாள் குறவள்ளி மயிலாள்
மடிமீது உனை இருத்தி வருடியதாலோ.... (ஆனந்த நடனம் )

**சரணம்**

குன்று தோறாடிடும் குமர வடிவேலன்
உந்தனின் மீது அமர்ந்ததனாலோ
மீன் விழியாள் குலமங்கை குஞ்சரியாள்
கடைக்கண்அருட் பார்வை கிடைத்ததனாலோ (ஆனந்த நடனம்)

**14.2** பொதுவான விதிகள்
- 14.2.1 பிரிவின் தரங்களுக்கேற்ப பரத நடன அடவுகள் பிரயோகிக்க வேண்டும்.
- 14.2.2 நட்டுவாங்கத்தாளமும் வாய்ப்பாட்டு இசையும் போதுமானவை.
- 14.2.3 அணிசேர் இசைக்கருவிகள் பயன்படுத்த முடியாது.

**14.3** நேரம் - 06 - 08 நிமிடங்கள்

**14.4** புள்ளித்திட்டம் - கல்வியமைச்சின் செயலாளரின் 01/2026ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தைப் பார்க்க

**15 போட்டி இல : 41 நடனம் – தனி மூன்றாம் பிரிவு தரங்கள் 10, 11**

**15.1 விடயம் - பதம்**

**பாடல் - தாமரை இலையினில்**
**பாடல் இயற்றியவர் -இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீவீரமணி ஐயர்**
**இராகம் - ஹிந்துஸ்தான் பீலு**
**தாளம் - ஆதி**

**பல்லவி**

தாமரை இலையினில் நான் எழுதிய காதல்சேதி அறிவானோடி
நல்லைக்குமரன் செப்பியதைச் சொல்லடி - சகியே

**அனுபல்லவி**

காமன் கணைசொரிய சோமன் அனல் பொழிய
கன்னிப் பருவமடி வேதனை அள்ளித் தருகுதடி - சகியே

**சரணம்**

வேலினைத் தூக்கும் போதென் விழி நினைவு வராதா
பாலினை மாந்தும் போதென் பால்முகம் முன் வராதா
காலினில் கழல் ஒலிக்க கன்னியர் குரல் கேளாதா
வேலன் எனை மறந்து வேடிக்கை செய்கிறானா

**15.2 பொதுவான விதிகள்**
- 15.2.1 பிரிவின் தரங்களுக்கேற்ப பரத நடன அடவுகள் பிரயோகிக்க வேண்டும்
- 15.2.2 நட்டுவாங்கத்தாளமும் வாய்ப்பாட்டு இசையும் போதுமானவை.
- 15.2.3 அணிசேர் இசைக்கருவிகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

**15.3 நேரம்** - 06 - 08 நிமிடங்கள்

**15.4 புள்ளித்திட்டம்** - கல்வியமைச்சின் செயலாளரின் 01/2026ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தைப் பார்க்க.

**16.போட்டி இல : 42 நடனம் - தனி நான்காம் பிரிவு 12, 13**

**16.1 விடயம் - புராண இதிகாசக் கதைகள்**

புராண இதிகாசக் கதைகளிலிருந்து ஏதாவது ஒரு சம்பவத்தினை நடுவர்கள் போட்டி நடைபெறும் இடத்தில் வழங்குவார்.
அந்தத் தலைப்பை மையமாகக் கொண்டு நடனத்தை ஆக்கம் செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

**16.1.2** கல்வியமைச்சின் செயலாளரின் 01/2026 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தில் உள்ள இப் போட்டிக்குரிய பொதுவான விதிகள் என்னும் பகுதியைப் பார்க்க.

**16.1.3 நேரம் -** முன்னாயத்தம் செய்வதற்கு 15 நிமிடம் வழங்கப்படும்.
அபிநயித்தல் 05 – 07 நிமிடங்கள்

**16.1.4 புள்ளித்திட்டம் -** கல்வியமைச்சின் செயலாளரின் 01/2026 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தைப் பார்க்க.

**17.போட்டி இல : 42 நடனம் - குழு 1 தரங்கள் 06,07,08,09**

17.1 விடயம் - அரிவி வெட்டு தொடர்ந்து கும்மி
அரிவி வெட்டு, கும்மி - இவற்றுக்குப் பொருத்தமான பாடலாக அமைதல் வேண்டும்.

17.2 பொதுவான விதிகள் :

கல்வியமைச்சின் செயலாளரின் 01/2026 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தைப் பார்க்க.

17.3 நேரம் : 07- 08 நிமிடங்கள்

17.4 புள்ளித்திட்டம் - கல்வியமைச்சின் செயலாளரின் 01/2026 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தைப் பார்க்க.

**18.போட்டி இல : 43 நாட்டிய நாடகம் (ஆடற்கதை) பிரிவு : திறந்த போட்டி**

**18.1 விடயம்** : காளிங்க நர்த்தனம்

யமுனை நதியினை மக்களும் ஏனைய பல்லுயிரினங்களும் பயன்படுத்தி மகிழ்வாக வாழ்ந்தார்கள் கிருஷ்ணன் தனது நண்பர்களுடன் பந்து விளையாடும் போது பந்தானது விஷமான யமுனை நதிக்குள் விழுந்தது. அதனை எடுப்பதற்காக ஆற்றுக்குள் குதித்தான். கருடனுக்கு அஞ்சிய காளிங்கன் யமுனையின் ஒரு பகுதியில் தனது குடும்பத்துடன் வசித்து தனது விஷத்தால் நீரையும் மரம், செடி, கொடிகளையும் அசுத்தமாக்கினான். அவன் விழுந்த சலசலப்பில் காளிங்கன் கோபம் கொண்டு கிருஷ்ணனைத் தாக்கினான். கிருஷ்ணனின் விஷ்வரூப தரிசனத்தினைக் கண்டு காளிங்கன் தலையில் ஏறி நடனம் ஆடினான். காளிங்கனும் அவனது மனைவிமாரும் கிருஷ்ணனிடம் மன்னிப்புக் கேட்டதுடன் தனது தவறினை உணர்ந்து ரமணகத்தீவுக்குச் சென்றான். அன்று முதல் யமுனை நதியினை சகலரும் பயன்படுத்தி சந்தோஷமாக வாழ்ந்தார்கள்.

தீமையை ஒழித்து நன்மையை நிலைநாட்டுவதாக தகுந்த கதாபாத்திரங்களைக் கொண்டு சித்திரிக்கும் வகையில் குறிப்பிட்ட நாட்டிய நாடகத்தை தயாரித்து வழங்க வேண்டும்.

**18.2 போட்டி விதிகள் :**

18.2.1 கல்வியமைச்சின் செயலாளரின் 01/2026 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தைப் பார்க்க.

18.2.2 நாட்டிய நாடகத்திற்குரிய உபகரணங்கள் உலோகத்தாலானவையாக இருத்தல் கூடாது.

18.2.3 **பக்கவாத்தியம் பாடசாலை மாணவர் அல்லது பாடசாலை ஆசிரியராலேயே இசைக்கப்படல் வேண்டும்.** என்பதுடன் அவர்களின் பெயர்ப்பட்டியல் அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்ட நாட்டிய நாடகப் பிரதியுடன் இணைக்கப்படல் வேண்டும்.

**18.3 நேரம்** : 18 – 20 நிமிடங்கள்

**18.4 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 01/2026 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தைப் பார்க்க.**

**19.போட்டி இல : 48 இலக்கிய நாடகம் திறந்த போட்டி**

19.1 **விடயம் - சிலப்பதிகாரம் - கோவலனை மையமாகக் கொண்ட கதையாடல்**

(இந்திர விழவு ஊர் எடுத்த காதையிலிருந்து கொலைக்களக் காதை வரையிலான கதைப் பகுதி)

19.2 **குறிப்புகள் -**

19.2.1 மேலே தரப்பட்டுள்ள இலக்கிய கதாபாத்திரத்தின் முக்கிய குணப்பண்புகள், ஏனைய கதாபாத்திரங்களோடு இணைந்து வெளிப்படக்கூடிய சந்தர்ப்பம்/ சந்தர்ப்பங்களைத் தெரிவு செய்து நாடகப்பிரதி ஆக்கப்படல் வேண்டும்.

19.2.2 நாடகப் பிரதி புத்தாக்கமுடையதாக இருத்தல் வேண்டும்.

19.2.3 ஏனைய பாத்திரங்களை நாடகப் பிரதியாக்கத்திற்கு அமைவாக அமைத்துக்கொள்ள வேண்டும்

19.3 **போட்டி விதிகள் - கல்வியமைச்சின் செயலாளரின் 01/2026 ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க.**

19.4 **நேரம்** - 18- 20 நிமிடங்கள்

19.5 **புள்ளித்திட்டம் - கல்வியமைச்சின் செயலாளரின் 01/2026 ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க**



Scanned with CamScanner

20.போட்டி இல : 49 வில்லுப்பாட்டு திறந்த போட்டி

20.1 விடயம் : தன் நெஞ்சே தன்னைச் சுடும் - திருக்குறள்

குறிப்பு :

வில்லுப்பாட்டின் கதைப்பிரதி, தமிழ் இலக்கியமொன்றைத் தெரிவு செய்து, அதிலிருந்து எடுக்கப்பட்ட காட்சியை அடிப்படையாகக் கொண்டு விடயத் தலைப்பைப் பிரதிபலிக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும்.

20.2 போட்டி விதிகள் : கல்வியமைச்சின் செயலாளரின் 01/2026 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தைப் பார்க்க.

20.3 நேரம் : 20 நிமிடங்கள்

20.4 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 01/2026ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தைப் பார்க்க.

நாலக களுவெவ
செயலாளர்
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
இசுருபாய.



Scanned with CamScanner